பக்கங்கள்: எட்டு

Registered as a Newspaper

★ காஞ்சிபுரம்
★ பெனாரீஸ்
★ கெவி தஞ்சூர்
★ பாட்லி
★ பட்டுவேஷ்டிகள்

மற்றும் சகலவிதமான
பிளவ்ஸ் பீஸ் வகைகளுக்கும்

ராசி சில்க்ஸ்

நியூ மார்க்கட்
உட்புறம்
யாழ்ப்பாணம்.

# உதயன்

விலை ரூபா 3-50

மங்கள வைபவங்களுக்
கேற்ப உடுபுடவைகள்

ராசி சில்க்ஸ்
70, நியூ மார்க்கட்
உட்புறம்
யாழ்ப்பாணம்.

சுடர்: 5 சுக்கில ஆடு பங்குனி மீ 03 உ வெள்ளிக்கிழமை ஹிஜ்ரி 1410 ஷஃபான் பிறை 18 (16-03-1990) UTHAYAN - A LIVELY NATIONAL TAMIL DAILY கதிர்: 35

# அகதிகள் என்ற போர்வையில் திருமலையில் ஜே. வி. பியினர்!

## கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று சொல்கிறார் ரஞ்சன்

கொழும்பு, மார்ச் 16

திருகோணமலைக்கு அகதிகள் என்ற போர்வையில் ஜே. வி. பியினரும் செல்கின்றனர் எனத் தெரிய வருகிறது. எனவே அகதிகள் விடயத்தில் கூடிய கவனம் செலுத்தி, கடும் நடவடிக்கை எடுக்கப்படும்.

இவ்வாறு வெளிபுறவு அமைச்சரும், பாதுகாப்புத் துணை அமைச்சருமான திரு. ரஞ்சன் விஜேரத்தினா தெரிவித்தார்.

அமைச்சரவைக் கூட்டத்தின் பின்னர் நேற்று நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் அவர் மேற்கண்ட தகவலை வெளியிட்டார்.

அகதிகள் பற்றிச் செய்தியாளர்கள் கேட்ட போது அமைச்சர் மேலும் சொன்னதாவது:-

அகதிகளை மீளக் குடியமர்த்தும் நடவடிக்கைகளை அரசு விரைவில் மேற்கொள்ளும். திருமலைக்கு அகதிகள் என்ற போர்வையில் தென்னிலங்கை ஜே. வி. பி. யினர் செல்வதாகத் தெரியவருகிறது.

அப்படியானால் அகதிகள் விஷயத்தில் கூடிய கவனம் செலுத்திக் கடும் நடவடிக்கை எடுக்கப்படும்.

இலங்கையிலிருந்து செல்லும் அகதிகளை தமிழ்நாடு ஏற்க மறுத்திருப்பது மகிழ்ச்சி தரும் செய்தியாகும். தமிழ்நாடு, அகதிகளை ஏற்குமானால் இலங்கையில் பிரச்சினை நீடிக்க வாய்ப்பு ஏற்படும் — என்றார்.

அரசாங்க, கூட்டுத்தாபனங்களில் விகிதாசார அடிப்படையில் நியமனம் வழங்காத அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்கப்படும். அது குறித்து, பொது நிர்வாக அமைச்சு சகல திணைக்களங்களுக்கும் சுற்றுநிருபத்தை அனுப்பி வைத்துள்ளது — என்று அமைச்சர் மற்றொரு கேள்விக்குப் பதிலளிக்கையில் தெரிவித்தார். (அ-2)

## எஞ்சியுள்ள இந்தியத் துருப்பினர் 25 ஆம் திகதிக்குள் திரும்பி விடுவர்!

### அமைச்சர் ரஞ்சன் நேற்றுத் தகவல்

கொழும்பு, மார்ச் 16

திருகோணமலையிலும், காங்கேசன்துறையிலும் எஞ்சியுள்ள இந்தியத் துருப்புக்கள் இம் மாதம் 25 ஆம் திகதிக்குள் வெளியேறிவிடும் என்று வெளியுறவு அமைச்சர் திரு. ரஞ்சன் விஜேரத்தினா நேற்றுத் தெரிவித்தார்.

அமைச்சரவைக் கூட்டத்தின் பின்னர் நடத்திய பத்திரிகையாளர் மாநாட்டில் அவர் இத் தகவலை வெளியிட்டார்.

அங்கு அவர் மேலும் சொன்னதாவது:-

திருமலையில் மூவாயிரம் முதல் நாலாயிரம் இந்திய வீரரும், காங்கேசன்துறையில் 1,500 இந்திய வீரரும் மட்டுமே இப்போது உள்ளனர்.

மார்ச் 24 அல்லது 25 ஆம் திகதிக்குள் இவர்கள் அனைவரும் வெளியேறிவிடுவர்.

விடுதலைப் புலிகள் ஆயுதங்களை ஒப்படைப்பது சம்பந்தமான பேச்சுக்கள் தொடர்கின்றன.

இலங்கை பாதுகாப்புப் படைகளும் விடுதலைப்புலிகளும் ஆளுக்கு ஒவ்வொரு பக்கம் பாதுகாப்புப் பணியில் இறங்கியுள்ளன.

எப்படியும் ஒரு நாள் விடுதலைப்புலிகள் எமது அரசுப் படையில் ஒன்றாக இணைய வேண்டியவர்கள்.

அரசாங்கமும் விடுதலைப் புலிகளும் ஒருங்கிணைந்து செயற்படுவார்கள். எதிர்காலத்தில் செயல்பட இருப்

(2 ஆம் பக்கம் பார்க்க)

### உள்ளே

காரைநகர் களபூமி திக்கரை முருகமூர்த்தி தேவஸ்தான மண்டலாபிஷேக பூர்த்தி விழா இன்று நடைபெறுகிறது.

(சிறப்புமலர் 5 ஆம் பக்கத்தில்)

## உயர் கல்வி, கல்வி அமைச்சு இரண்டும் ஒன்றிணையும்

### புதிய அமைச்சு உதயமாகிறது

யாழ்ப்பாணம், மார்ச் 16

உயர் கல்வி அமைச்சும், கல்வி அமைச்சும் ஒன்றிணைக்கப்பட்டு தனி அமைச்சு விரைவில் உருவாக இருக்கிறது.

தற்போது உயர் கல்வி அமைச்சின் கீழ் பல்கலைக்கழகங்களும் கல்வி அமைச்சின் கீழ் கல்லூரிகளும் இயங்குகின்றன.

புதிய திட்டப்படி அமைச்சுக்கள் ஒன்றிணைக்கப்பட்டு இயங்குவதன் மூலம் பல்கலைக்கழகங்களுக்குள்ளும், கல்லூரிகளுக்குள்ளும் ஓர் இணைப்பு ஏற்பட வழி பிறக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதற்கான பூர்வாங்கவேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என அறியவந்தது. (ஒ-3)

### முச்சந்தி முரளி



சேர்க்கிறதும், பிரிக்கிறதுமாக இருந்தால் புதிசு புதிசாக மந்திரிமாரையும் மாத்த வசதியாய் இருக்கும் எண்டதாலையோ உப்பிடிச் செய்யிறவை...!

## யாழ். மாவட்டத்தின் பயிலுநர் ஆசிரியர் பட்டியல்

### 211 பேரின் விவரம் நேற்று அறிவிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 16

யாழ் மாவட்டத்தில் நான்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் இருந்து பயிலுநர் ஆசிரியர் பதவிக்குத் தெரிவான 211 பேரின் விவரங்கள் அடங்கிய இறுதிப்பட்டியல் நேற்றுக் கல்வித் திணைக்களத்தால் வெளியிடப்பட்டது.

முறையீடுகள் விசாரிக்கப்பட்டபின் நேற்று வெளியிடப்பட்ட இறுதிப்பட்டியலில் சாவகச்சேரி உதவி அரசாங்க அதிபர் பிரிவில் 110 பேரும், ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் 23 பேரும், நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் பிரிவில் எட்டுப்பேரும், வேலணை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் 70 பேரும் இடம்பெற்றுள்ளனர்.

இவர்களில் நெடுந்தீவு, ஊர்காவற்றுறை, வேலணை பிரிவுகளில் இருந்து தெரிவானவர்களை 17ஆம் திகதியும், சாவகச்சேரி பிரிவில்

[2 ஆம் பக்கம் பார்க்க]

### கோர்பச்சேவ் சிகரெட்!

ஜெனிவா, மார்ச் 16

சுவிற்சர்லாந்தில் உள்ள சிகரெட் கம்பெனி தான் தயாரிக்கவுள்ள புதிய ரக சிகரெட்டுக்கு சோவியத் ஜனாதிபதி மிக்செய்ல் கோர்பச்சேவின் பெயரைச் சூட்டியிருக்கிறது.

''சுதந்திரத்தின் சுவை தரும் சிகரெட்'' என்று இந்த கோர்பச்சேவ் சிகரெட்டுக்கு விளம்பரம் செய்ய இந்த நிறுவனம் தீர்மானித்து இருக்கிறது. (ஒ-எ)

### ''மாத இறுதிக்குள் அமைதிப்படை வெளியேறிவிடும்''

புதுடில்லி, மார்ச் 16

இலங்கையில் இருந்து அமைதிப்படை இம்மாத முடிவினுள் வெளியேறிவிடுவர் என்று இந்தியப் பிரதமர் வி. பி. சிங் நேற்று தன்னைச் சந்தித்த மாலைதீவு ஜனாதிபதி ஜனாப் கயூமிடம் தெரிவித்தார்.

மூன்றுநாள் அரச விஜயம் ஒன்றை மேற்கொண்டு நேற்று புதுடில்லிக்கு மாலைதீவு ஜனாதிபதி கயூம் சென்றார். (ஒ-எ)

### சுப நேரம்

16-3-1990

வெள்ளிக்கிழமை பங்குனி 3

சுபநேரம்:
6-26முதல் 7-51 வரை

இராகுகாலம்-
10-51முதல் 12-21 வரை

இவை இரவுக்கும் பகலுக்கும் பொருந்தும்

### அச்சுவேலி, நீர்வேலி, இருபாலை வாசிகளுக்கு

## ஆஸ்பத்திரி வீதி வங்கியில் நாளை ரூ.4,000 நிவாரணம்

யாழ்ப்பாணம், மார்ச் 16

இலங்கைவங்கியின் ஆஸ்பத்திரி வீதி பிரதான கிளையில் நாளை சனிக்கிழமை உற்பத்தித் திறன் வாய்ந்த நிவாரணப் பணமான ரூபா 4 ஆயிரம் வழங்கப்படுகிறது.

கோப்பாய் உதவி அரச அதிபர் பிரிவில் இருந்து அச்சுவேலி வடக்கு [ஜே/128], நீர்வேலி [ஜே/136], இருபாலை [ஜே/142] கிராமசேவையாளர் பிரிவுகளைச் சேர்ந்தவர்களுக்கே இந்த நிவாரணம் வழங்கப்படுகிறது.

இந்த உதவிப் பணத்தை பெறத்தகுதியுடையவர்கள் தத்தமது கிராமசேவையாளரிடம் இருந்து தொடர் எண்களைப் பெற்று வருமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

காலை 8 மணிமுதல் பிற்பகல் ஒருமணிவரை கொடுப்பனவு வழங்கப்படும் என்று வங்கி நிர்வாகிகள் அறிவித்துள்ளனர். [ஒ]

### ரூபவாஹினியில் இன்று தமிழ்ப்படம்

கொழும்பு, மார்ச் 16

ரூபவாஹினியில் இன்று 'குங்குமக்கோடு' என்ற தமிழ்த் திரைப்படம் ஒளிபரப்பப்படவுள்ளது.

இப்படத்தில் மோகன், சுரேஷ், இளவரசி ஆகியோர் நடிக்கின்றனர். (ஒ-9)

## யாழ். நகரில் மாத்தயா கட்சி அமைப்பாளரை சந்திப்பார்

யாழ்ப்பாணம், மார்ச் 16

தமிழீழ விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் தலைவர் கோ. மகேந்திரராசா [மாத்தயா] யாழ்ப்பாணம் வந்துள்ளார்.

திரு. மாத்தயா இங்கு சில நாட்கள் தங்கியிருப்பார்என விடுதலைப் புலிகள் வட்டாரங்கள் உதயனுக்குத் தெரிவித்தன.

விடுதலைப்புலிகள் இயக்கப் போராளிகள், விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் அமைப்பாளர்கள் மற்றும் ஆதரவாளர்கள் ஆகியோரை திரு. மாத்தயா சந்திப்பார் என்று தெரிவிக்கப்பட்டது.

காங்கேசன்துறையில் தடுத்து வைக்கப்பட்டு விடுவிக்கப்பட்ட போராளிகளையும் திரு. மாத்தயா சந்திக்க உள்ளார்.

[ 2 ஆம் பக்கம் பார்க்க ]

## மலையகத்தில் படையினர் உஷார்!

நுவரெலியா, மார்ச் 16

மலையகத்தின் முக்கிய நகரங்களில் பொலீஸாரும், இராணுவத்தினரும் உஷார் நிலையில் வைக்கப்பட்டுள்ளனர்.

நுவரெலியா, தலவாக்கொல்லை, அட்டன், மஸ்கெலியா போன்ற நகரங்களில் இரவு பகலாக படையினர் ரோந்துக் கடமையில் ஈடுபட்டுள்ளனர்.

சந்திக்குச் சந்தி வாகனங்கள் மறிக்கப்பட்டு சோதனையிடப்படுகின்றன. சகல பிரயாணிகளும் வாகனங்களில் இருந்து இறக்கப்பட்டு அவர்களின் உடமைகள் சோதிக்கப்படுகின்றன.

தனியார் லொறிகள் மூலம் வரும் பொருள்களும் இறக்கப்பட்டு சோதனையிடப்படுகின்றன.

இதனால், சிறிது காலம் நிம்மதியாக இருந்த தமிழ் இளைஞர்கள் மீண்டும் கலக்கமடைந்துள்ளார்கள். யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட இளைஞர்கள் கடும்

(2 ஆம் பக்கம் பார்க்க)

## ஒரிஸ்ஸா அகதிகளுக்கு நாளொன்றுக்கு ரூ.8-50 படி

### வெளியே செல்ல அனுமதியில்லை

சென்னை, மார்ச் 16

ஒரிஸாவிலுள்ள கலந்தி என்னும் இடத்தில் தங்கவைக்கப்பட்டுள்ள தமிழ் அகதிகள் ஒவ்வொருவருக்கும் நாளொன்றுக்கு தலா 8 ரூபா 50 சதம் படியாக (அலவன்ஸாக) வழங்கப்படுகிறது.

குறிப்பிட்ட ஒரு பகுதியிலுள்ள கடைகளில் இவர்கள் பொருள்களை வாங்குவதற்கும் வசதி செய்யப்பட்டுள்ளது.

கலந்தி என்ற இடத்தில் உள்ள இந்த முகாமில் தங்கியிருக்கும் இயக்கத்தைச் சேர்ந்த இவர்கள் வெளியே செல்ல அனுமதிக்கப்படுவதில்லை.

இந்த முகாமிலுள்ளவர்களுக்கு எந்தவித தகுதி அடிப்

( 2 ஆம் பக்கம் பார்க்க)

## சுதந்திரக் கட்சியின் அடுத்த தலைவர் யார்?

### அனுரா கேட்கிறார் இப்படி!

கொழும்பு, மார்ச் 16

சுதந்திரக் கட்சித் தலைமைப்பதவிக்கு அடுத்த வாரிசு யார் என்பதை சரியாகச் சொல்ல கட்சி தவறிவிட்டது என்று திருமதி சிறிமா பண்டாரநாயக்காவின் மகனும் கம்பஹா மாவட்ட சுதந்திரக் கட்சி எம். பியுமான திரு. அனுராபண்டாரநாக்கா குற்றஞ்சாட்டியிருக்கிறார்.

சுதந்திரக்கட்சி பொதுச் செயலாளருக்கு அனுப்பி வைத்துள்ள கடிதம் ஒன்றில் திரு. அனுராபண்டாரநாயக்கா இக்குற்றச்சாட்டைச் சுமத்தியிருக்கிறார்.

கடிதத்தில் திரு. பண்டாரநாயக்கா மேலும் கூறியிருப்பதாவது:-

சுதந்திரக்கட்சியின் அடுத்த தலைவர் வெளிநாட்டில் இருந்து கொண்டு வரப்பட இருக்கிறார் என்று எனது எதிரிகள் பிரசாரம் செய்து வருகின்றனர்.

அரசியல் ரீதியில் எனக்குப் பாதிப்பு ஏற்படுத்தும் முயற்சி இது என்று கருதுகின்றேன்.

இது பற்றி நாடாளுமன்றத்திலும் பிரஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. இது குறித்து தனது நிலைப்பாட்டை எடுத்துச் சொல்ல கட்சி தவறிவிட்டது குறித்து நான் வருந்துகின்றேன்.

இந்தநிலையில் நான் இனியும் மௌனமாக இருக்க முடியாது.

சுதந்திரக்கட்சி அமைப்பாளர்கள் சிலரை பதவி நீக்கம் செய்த விஷயத்திலும்

(2ஆம் பக்கம் பார்க்க)

7ஆம் பக்கத்தில்
★ யாழ் மாவட்டத்தில் பயிலுநர் ஆசிரியர் பதவிக்குத் தெரிவானோர் விவரம்.
★ யாழ் மாவட்ட புதிய கிராமசேவையாளர்பட்டியல்.

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சின்னஞ் சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

பூரண விளைத்திறனுடைய பம்பாய் வெங்காயம், பீட்ரூட், கோவா விதைகள் விற்பனைக்குண்டு பிள்ளையார், 259, காங்கேசன் துறை வீதி, யாழ்ப்பாணம். (2819)

அழகிய 4 மாத பெண் பொம்மனேரியன் நாய்க் குட்டியும், அடை வைப்பதற்கு ஏற்ற பெண்டம், வெள்ளடியன், வாண் கோழி முட்டைகளும், கால் நடை உணவு, கோழி உணவு முதலியனவும் விற்பனைக்குண்டு. தொடர்பு: K. அன்னலிங்கம், கலட்டி ஒழுங்கை, கோண்டாவில் மேற்கு, கோண்டாவில் (2863)

### கோழிக்குஞ்சு விநியோகம் (UPLANDS FARM)

(Unsexed) தனி சிகப்பு சேவல் (பிலிமத்து கறுப்பு வரிசேவல் (Lohmann) பிறவுண் சேவல் வெள்ளை கறுப்பு பிறவுண் பேட்டுக் குஞ்சுகள் புறொயிலர் குஞ்சுகள் 21-3-1990 புதன்கிழமை விநியோகிக்கப்படும். முன் கூட்டியே பதிவு செய். இல 9, கந்தையா லேன்ச, சுன்னாகம். (புகையிரத நிலைய அருகில்) (T2035)

### பெண் லிகிதர் தேவை

யாழ் நகரில் உள்ள பிரபல தனியார் கல்வி நிறுவனம் ஒன்றிற்கு பெண் லிகிதர் தேவை. க. பொ. த. (உயர்தரம்) வரை படித்திருத்தல் விரும்பத் தக்கது. விண்ணப்ப முடிவுத் திகதி 24-3-90. தொடர்பு: No. 641, C/o உதயன். (C/4024)

### பெண் தொழிலாளர் தேவை

கைத்தொழில் நிறுவனத்திற்கு 18 வயதிற்கும் 25 வயதிற்கும் உட்பட்ட பெண் தொழிலாளர் தேவை. அயல் கிராமங்களில் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை கொடுக்கப்படும். வைட் பீல்ட் இன்டஸ்ரீஸ், வல்லை வீதி, சங்கானை. (2860)

### வாங்கலாம் விற்கலாம்

பழைய புத்தகங்கள், வாங்கப்படும் விற்கப்படும். புத்தகம் கட்டுபவர்கள் தேவை. Senathirajan, Second Hand Book House 13/6, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம். (2852)

### புத்தகம்

இந்திய எழுத்தாளர்களான லக்ஸ்மி, சிவசங்கரி, அனுராதாரமணன், பாலகுமாரன், ரமணிச் சந்திரன் மேத்தா, உதயமூர்த்தி, த.சி.கணேசன், வரதராசன், கண்ணதாசன், சிறுவர் புத்தகங்கள், ஜோதிடம். சித்தமருத்துவம், புத்தகங்கள் வந்துள்ளன பிரதி கட்குமுந்துங்கள் நூலகங்கள், தொகையாக கொள்வனவு செய்வோர், வியாபாரிகட்கு, விசேட கழிவு. ஸ்ரீகாந் புத்தகசாலை மின்சார நிலைய வீதி, பஸ்நிலைய முன்புறம், யாழ்ப்பாணம். (சி/3488)

### ஆங்கிலப் புத்தகம்

ஆங்கிலம் பேச, எழுத வாசிக்க சிறந்த முறையில் எழுதப்பட்ட புத்தகமென எல்லோராலும் பாராட்டுப் பெற்ற புத்தகம்தான் Basic Grammar & Spoken Practical கிடைக்கும் இடம்: பூபால சிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம். (11992)

### தவறிவிட்டது

ஹொண்டா விட் மோட்டார் சைக்கிள் ஒன்றின்) சைலன்ர் ஒன்று யாழ் பிரதான வீதியில் கொழும்புத்துறைக்கும் வேம்படிச் சந்திக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து உதயன் காரியாலயத்தில் ஒப்படைக்கவும். (12054)

பத்மாவதி பொன்னுத்துரை ஆகிய எனது அடையாள அட்டை இல. 315411785 13-3-90 பலாலி பஸ்ஸில் மணிபேசுடன் தவறிவிட்டது. எடுத்தவர்கள் உதயன் காரியாலயத்தில் ஒப்படைக்கும்படி கேட்டுக் கொள்கிறேன். (2865)

### எஞ்சியுள்ள...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

படை இப்பொழுது முதல் சகல துறைகளிலும் எதிர் பார்க்கிறேன்.

திருகோணமலை நகரில் இருந்து இந்தியத் துருப்புக்கள் வெளியேறிவிட்டன.

சட்டம் - ஒழுங்கை நிலை நாட்டுவதில் இலங்கைப் பொலீஸார் ஈடுபட்டுள்ளனர்.

சுமார் 4 ஆயிரம் இந்திய வீரர்கள் கப்பலில் புறப்பட்டுச் செல்வதற்கு என்று அங்கு துறைமுகத்தில் தயாராக உள்ளார் என்று அமைச்சர் சொன்னார். (அ-எ-2)

# போராளிகளின் தியாகத்தால் தமிழர் தலை நிமிர்ந்து நிற்கிறார்கள்

## லெப்டினன்ட் சித்திரா

குருநகர் மார்ச் 16

விடுதலை போராட்டங்களில் இதுவரை ஆயிரத்து முந்நூற்று ஐம்பது விடுதலைப் புலிகள் போராளிகள் உயிர்த் தியாகம் செய்துள்ளார்கள். அதனால் தமிழீழ மக்கள் தலை நிமிர்ந்து நிற்க முடிகிறது.

தமிழீழ விடுதலைப் புலிகளின் மகளிர் அணியை சேர்ந்த லெப்டினன்ட் சித்திரா இவ்வாறு தெரிவித்தார்.

கடந்த செவ்வாய் மாலை யாழ் பிரதான வீதி - மடம் வீதிச் சந்தியில் இடம் பெற்ற நினைவுத்தூபி திறப்பு விழாவிற்கு லெப்டினன்ட் சித்திரா தலைமை வகித்தார்.

வீரமரணமடைந்த பெண் போராளி இமெல்டாவின் நினைவுத் தூபித் திறப்பு விழாவில் சித்திரா தொடர்ந்து கூறியதாவது,

கடந்த கால போராட்டங்களில் இருபத்தையாயிரம் பொது மக்கள் வரையில் உயிரிழந்துள்ளார்கள்.

ஆனாலும் சகல விதமான ஏகாதிபத்திய தலையீடுகளுக்கும் அடிபணியாது தலை நிமிர்ந்து நிற்கிறார்கள். தமிழீழ மக்கள்.

களப்பலியான போராளிகளுக்கு நாம் அமைக்கும் இந்த நினைவுத் தூபிகள், அவர்களது தியாக வாழ்க்கையை இளைஞர்கள் உணர்ந்து கொள்ள வழிசமைக்கின்றன என்றார்.

வலிகாமம் பொறுப்பாளர் திரு. ஆஞ்சநேயர் பேசுகையில் கூறியதாவது :-

விடுதலைப் புலிகளுக்கு உள்ள மக்கள் ஆதரவு இலங்கை அரசை எங்களுடன் பேச வைத்துள்ளது''.

''எங்கள் மண்ணையும், மொழியையும் காப்பாற்ற உருவான ஆயுதப் போராட்டம் இன்று மிக்க பலமான தொரு நிலையை எட்டியுள்ளது'' - என்றார்.

நினைவுச் சின்னத்தை வீர மரணமடைந்த பெண் போராளி இமெல்டாவின் பெற்றோர் அமிர்தநாதர் தம்பதிகள் திறந்து வைத்தார்கள்.

(ச-51)

### யாழ் நகரில்--

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

கோண்டாவிலில் அமைக்கப்பட்டு வரும் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் யாழ் மாவட்ட காரியாலயத்தின் அமைப்பு வேலைகளையும் அவர் பார்வையிடுவார்.

கட்சியின் எதிர்காலத் திட்டங்கள், நடவடிக்கைகள், செயற்பாடுகள் என்பன பற்றியும் மக்கள் முன்னணியின் முக்கிய உறுப்பினர்களுடன் அவர் ஆலோசனை நடத்த உள்ளார். [அ-9]

### மலையக . .

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

சோதனைக்கும் விசாரணைக்கும் உட்படுத்தப்படுகின்றார்கள்.

நுவரெலியா, அட்டன் பகுதிகளில் உள்ள சகல ஹோட்டல்களும் தினமும் பொலீஸாரால் முற்றுகை இடப்படுகின்றன.

### ஒரிஸ்ஸா---

(1 ஆம் பக்க தொடர்ச்சி)

படையிலும் விசேட சலுகைகள்ஏதும் வழங்கப்படவில்லையாம்.

தலைவர்கள், முக்கியஸ்தர்கள், சாதாரண உறுப்பினர்கள் அனைவரும் சமமாகவே தங்க வைக்கப்பட்டுள்ளனராம்.

இவர்கள் தங்கியுள்ள இந்த அகதிமுகாமில் ஏற்கனவே திபெத்திய அகதிகளும், பங்களாதேஷ் அகதிகளும் இருந்னர் என்றும் -

அவர்கள் தமது தாயகங்களுக்கும், வெளிநாடுகளுக்கும் சென்றுவிட்டனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. [ஒ-9)

### சுதந்திரக்கட்சி--

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

கட்சி சரியாக நடந்து கொள்ளவில்லை.

நாட்டின் ஜனநாயக அமைப்புக்கள் மழுங்கடிக்கப் படுகின்றன என்று கூறும் சுதந்திரக்கட்சி தனது நடவடிக்கைகளை ஜனநாயக இலட்சியங்களுக்கு ஏற்றதாக அமைத்துக் கொள்ள வேண்டும் — என்று திரு. அனுராபண்டாரநாயக்கா தெரிவித்திருக்கிறார், (ஒ-எ)

### யாழ் மாவட்ட...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

இருந்து தெரிவானவர்களை 18 ஆம் திகதியும் தங்களது சான்றிதழ்களின் மூலப் பிரதிகளுடன் கல்வித்திணைக்களத்தில்சமுகமளிக்குமாறு கோரப்பட்டுள்ளது.

இறுதிப்பட்டியல்கள் அந்த அந்த கோட்டக்கல்வி அலுவலகங்களிலும், உதவி அரசாங்க அதிபர் அலுவலகங்களிலும் நேற்று வைக்கப்பட்டிருந்தன.

ஏனைய பிரிவுகளின் பட்டியல்கள் தொடர்ந்து வெளிவரும் என்று கல்வித்திணைக்கள அதிகாரி ஒருவர் உதயனுக்குத் தெரிவித்தார்.(ஒ.3)


## தேவை

1. அனுபவம் உள்ள காசாளர்
பிணைப்பணம் 5000 ரூபா
யாழ். நகரப் பகுதியில் வசிப்பது விரும்பத்தக்கது

2. பாதுகாப்பு உத்தியோகத்தர்
பிணைப்பணம் 1000 ரூபா
8 மணித்தியால வேலை

3. அலுவலக உதவியாளர் (Peons)
பிணைப் பணம் 1000 ரூபா
யாழ்நகரப் பகுதியில் வசிப்பது விரும்பத்தக்கது

கல்வி. நற்சாட்சிப்பத்திர மூலப் பிரதிகளுடன் 18 - 03 1990 ஞாயிறு காலை 8. 30 மணிக்கும், 12.00 மணிக்கும் இடையில் நேரில் வரவும்.

அருண் மார்க்கட்டிங் அன்ட் அட்வடைசிங்,
15, 2ஆம் ஒழுங்கை,
மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
(சி/3450)

The Christian Institute for The Study of Religion and Society

**D. T. Niles Memorial Scholarship**

The above Scholarship is available to Protestant Christian students offering Christian Civilisation as a subject for a degree course in a Sri-Lankan University. Applications to be sent on or before the 15th April 1990 to:

A. Kadirgamar
Acting Director
C. I. S. R. S.
Ashram
Chunnakam

[C 4029]

**Vacancy**

**For A Qualified Pharmacist**

Wanted for immediate engagement a Qualified Pharmacist in the Unified Medical Service of the Jaffna Diocese of the Church of South India. Salary Negotiable.

Please Apply To:

The Medical Superintendent,
Green Memorial Hospital,
Manipay.

[C-4021]

1. HEMAS DRUGS LTD
2. FARNEL (CEY) LTD

ஆகியவற்றின் வடமாகாண ஏகவிநியோகஸ்தர்கள்:-

**New Phaarmed Distributors**

128, Manipay Road, JAFFNA.

அத்துடன்:-
Pettah Pharmacy Ltd - இன் பொருட்களையும் இங்கே பெற்றுக்கொள்ளலாம்.

[சி-4007]

## புதிய உயர் கல்லூரி

ஆரியகுளம், யாழ்ப்பாணம்.

A/L 90

சனி - ஞாயிறு மீட்டல் வினா விடை வகுப்புகள்

ஆரம்பம்: 24- 03- 90

பொருளியல் — குமாரவேல்
வர்த்தகம் — தேவா
கணக்கியல் — யோகராஜா, இந்திரன்
அளவையியல் — சயந்தன், கேசவன்
புவியியல் — குணராஜா
தமிழ் — குழந்தை
அரசியல் — குமார்
இந்துநாகரீகம், இந்துசமயம் } அருள்நங்கை

A/L 90 பகல் நேர வகுப்புகள்

ஆரம்பம்-: 20- 03- 1990 (8:00 a. m)

**SPOKEN ENGLISH**
BY. BRITTO

சனி, ஞாயிறு, பகல் நேர வகுப்புக்கள் நடைபெறுகின்றன.

(சி/4027)


## நன்றி நவிலல்

### ஜெயலெக்ஷ்மி குலசிங்கம்

(கொழும்பு கணபதி வித்தியாலய ஆசிரியை)

காலஞ்சென்ற முன்னாள் கட்டடத் திணைக்களப் பதில் இயக்குனர் திரு. V. குலசிங்கம் அவர்களின் அன்பு மனைவி ஜெயலெக்ஷ்மி குலசிங்கம் (கொழும்பு கணபதி வித்தியாலய ஆசிரியை) 8.3.90இல் கொழும்பில் அகால மரணமானார் அவரின் இறுதிக்கிரியைகள் 11-3-90 இல் கனத்தை மயானத்தில் நடைபெற்றன. இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்டு எமக்குப் பலவழிகளிலும் உதவி செய்த உற்றார், உறவினர், நண்பர்களுக்கு எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

சகோதரன் சி. கந்தப்பிள்ளை,
சகோதரிகள் திருமதி இரத்தினசிங்கம்,
திருமதி பிறைசூடி.
(வேம்படி மகளிர் கல்லூரி)

77 மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம்.

(2901)


## வெளிவந்து விட்டது!

பங்குனி மாத

★ சோதிட மலர் ★

(15-03- 1990 — 13- 04- 1990)

✶ 20- 03- 1990 இல் நிகழும் சனி மாற்றப் பலன்களுடன் வழமைபோல் எல்லா அம்சங்களுடனும்!

விலை ரூபா 5. 00 மட்டுமே

[2797]

**Personal Classes**

B. M. C. Front Lane, Jaffna.

A/L 90

வினாவிடை வகுப்புக்கள் நடைபெறுகின்றன.

(Sat / Sun)

6.30 A.m. Bot. — செல்வநேசன்
7.30 A.m. Phy. — சத்தியசீலன்
8.30 A.m. Che. — செல்வா
9.30 A.m. Zoo. — ஈஸ்வரதாசன்
Pure. & App. — விஜயகுமார்

A/L 90 துரித மீட்டல் வகுப்புக்கள் ஆரம்பம்

18-03-90 ஞாயிறு 12.30 P. m.

12.30 P. m. Zoo. — 1.30 P.m. Bot.
2.30 P. m. Phy — 4.30 P. m. Che
12.30 P. m. Pure. & App.

விபரங்கள் நேரில்

(C/4028)

மீண்டும்

## ஓர் அரிய சந்தர்ப்பம்

அரசாங்க உத்தியோகஸ்தர்களுக்கான

S. L. A. S

(இலங்கை நிர்வாக சேவை)

மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை

Aug மாதமளவில் நடைபெறவிருக்கும் இப்பரீட்சைக்கான

விசேட பயிற்சி வகுப்புகள்

பல தனித்துவம் வாய்ந்த விரிவுரையாளர்களின் இணைந்த சேவை

ஆரம்பம்: 25-03-90

மு. ப. - 9.00 மணி

பாடநெறி:-
கிரகித்தல், நுண்ணறிவு, விடயஆய்வு.

★ விரிவுரைகள் சனி, ஞாயிறு தினங்களில் மட்டும்
★ கட்டணம் ரூபா 150.00 (மாதாந்தம்)
★ இலவச பாடக்குறிப்புகள்

விபரங்களுக்கு:

**ASTAN INSTITUTE**

166/1, Hospital Road,
JAFFNA

(A. S. சங்கரப்பிள்ளை கட்டிடம் 1ஆம் மாடி)

[சி-4018]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொய்யாமொழி

**குறள்:**

எற்றிற் குரியர் கயவரொன்று உற்றக்கால்
விற்றற்கு உரியர் விரைந்து.

**பொருள்:**

கயவர் எதற்கு உரியவர்? ஒரு துன்பம் வந்தடைந்த காலத்தில் அதற்காகத் தம்மைப் பிறர்க்கு விலையாக விற்று விடுதற்கு உரியவர் ஆவர்.


# உதயன்

இல: 292/2, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 2288

16-03-1990 த. பெ. இலக்கம் : 23


## விடுபட்டு விரக்தியுறும் இளைஞர் நலன் பேணுக!

கடந்த வருடம் நடைபெற்ற கல்விப் பொதுத்தராதரப் பத்திர (ஜி. சி. ஈ.) உயர்தரப் பரீட்சை முடிவுகள் வெளியாகிவிட்டன. யாழ்ப்பாண மாவட்டத்தில் மாணவர்களின் பெறுபேறுகள் திருப்திகரமாக அமைந்திருக்கின்றன. பரீட்சைக்குத் தோற்றியவர்களில் ஐம்பது சத வீதமானோர் பல்கலைக்கழக அனுமதிக்கு விண்ணப்பத் தகுதி பெற்றிருக்கிறார்கள். ஏனைய பகுதிகளிலும் மாணவர் திறமை சோடை போகவில்லை.

'கட்அவுட்' புள்ளி என்ற கட்டுப்படுத்தல் முறை இல்லாவிடில், இவர்கள் பல்கலைக்கழகங்களில் சேர்ந்து பொறியியலாளராகவோ, வைத்தியர்களாகவோ, பட்டதாரிகளாகவோ உயர்கல்வி வாய்ப்புப் பெறக் கூடியவர்கள்.

பல்கலைக்கழகங்களில் போதிய இடவசதி இல்லை, தகுதி பெறும் எல்லோரையும் அனுமதிக்க இயலாது. குறிப்பிட்ட எண்ணிக்கையினருக்கே உயர்கல்வி வசதி செய்துதர முடியும் என்பதால், அனுமதிக்குத் தகுதி பெற்றவர்களில் பலரும் விடுபடுகிறார்கள். இது இலங்கையில் வருடாந்த வழக்கமாகிவிட்டது.

தகுதி பெற்றும் உயர்கல்வி வசதி பெறமுடியாது விடுபடும் இளைஞர்களுக்கு, மாற்றுக் கல்வி வசதி செய்து கொடுப்பது குறித்து அரசு இன்னும் சரிவரச் சிந்திக்கவில்லை.

உயர்கல்வி வாய்ப்பை இழந்துபோனவர்கள் மற்றவர்களைப் போலவே வேலைவாய்ப்புகளை எதிர்பார்த்து பலதுக்கும் விண்ணப்பித்து தமது பொன்னான, — போனால் மீண்டும் கிடைக்காத — இளமைப் பருவத்தை வீணடிக்கிறார்கள். இது நாட்டின் மனித வளத்தை முளையிலே கிள்ளுவதாகும். இளைஞர் சக்தியை விழலுக்கு இறைப்பதாகும். அவர்களின் வாழ்வை சீரழித்து நிர்மூலமாக்குவதாகவும் முடிகிறது.

பல்கலைக்கழக அனுமதி பெறத் தகுதி இருந்தும் உயர்கல்வி வாய்ப்புக் கிடைக்காமல் விடுபடும் மாணவர்களுக்கு — இளைஞர்களுக்கு — மாற்றுக் கல்விவசதிகள், தொழில் சார்ந்த பயிற்சி வசதிகள், தகுதிக்கேற்ற வேலைவாய்ப்பு வசதிகள் என்பன செய்து கொடுக்கப்பட வேண்டும்.

படித்துவிட்டு வேலையற்றிருப்போர் கூட்டத்தில் இவர்களும் சாதாரணமாகச் சேர்ந்து கொண்டு வீணே காலத்தைக்கழிக்க அனுமதிப்பது அபத்தமாகும். பல்கலைக் கழகங்களுக்கு அடுத்த மட்டத்தில் இடைத்தர உயர்கல்வி நிலையங்களை நிறுவி நாட்டுக்குத் தேவையான உப மட்டத் தொழில்நுட்ப, தொழில்சார் ஆளணியினரை உருவாக்கலாம்.

''பொலிடெக்னிக்'' எனப்படும் பல்தொழில் நுட்ப, பல்தொழில் பயிற்சி நிலையங்கள் இதற்கு உகந்த விதத்தில் உதவும். ஆனால் அவையும் சரியான முறையில் திட்டமிடப்பட்டு, வேண்டிய வசதிகளுடன் அமைக்கப்பட வேண்டும். மாவட்டம் தோறும் நிறுவப்பட வேண்டும்.

அவற்றில், பல்கலைக்கழக அனுமதி பெறத்தகுதியிருந்தும் விடுபட்டவர்களை மட்டுமே சேர்த்து பல்கலைக்கழகக் கல்விக்கும், பயிற்சிக்கும் சமமான வசதிகள் செய்து கொடுப்பது முக்கியம், இது குறித்து உயர்கல்வி அமைச்சுப் பரிசிலனை செய்து இளைஞர் திறமையை நாட்டுக்குப் பயன்படுத்த முன்வர வேண்டும் எனக் கேட்கிறோம்.

தமிழ்ப் பகுதிகளைப் பொறுத்தமட்டில் மாணவர்கள் கடந்த வருடம் மிகவும் நெருக்கடியான, மனம் ஒன்றிப் படிக்க ஒவ்வாத சூழ்நிலையில் வாழ்ந்து கற்றவர்கள். பல கஷ்டங்களுக்கு மத்தியில் பாடசாலை சென்றவர்கள். தமது அயரா முயற்சியாலும், திறமையாலும் பரீட்சை எழுதித் தகுதி பெற்றிருக்கிறார்கள். அவர்கள் தாம் விடுபடுகிறார்கள் எனத்தெரிந்ததும் விரக்தி அடைவது இயல்பு.

இளைஞர் நலன்பற்றி ஆராய்ந்து அவர்களுக்கு ஏதேதோ எல்லாம் செய்யப்போவதாகக் கூறும் அரசு, இப்படி விரக்தி அடைபவர்களை என்ன செய்யப்போகிறது? கல்வி வசதி கிடையாமல், கைக்கு எட்டியும் வாய்க்கு எட்டாமல் விரக்தியுறும் இளைஞர் வேறு வழி செல்லாது தடுக்க என்ன செய்யப் போகிறது?

இதற்கு உடனடிப் பரிகாரம் கண்டாக வேண்டும். இல்லையேல் இளைஞர் எழுச்சிகளையும், அமைதியின்மையையும் தவிர்ப்பது கடினம் என்பதை அரசு உணரட்டும். அதனை உணர்ந்தாவது பல்கலைக்கழக அனுமதி பெறத் தகுதி இருந்தும் விடுபடும் இளைஞர்களுக்கு மாற்றுக்கல்வி, தொழில்சார் பயிற்சி வசதிகள் செய்து கொடுப்பதில் கவனம் செலுத்தட்டும்.

## திக்கரை முருகன் ஆலயத்தில் இன்று மண்டலாபிஷேகவிழா

யாழ்ப்பாணம் மார்ச் 16) காரைநகர் திக்கரை முருகன் ஆலயத்தில் இன்று நடைபெறும் மண்டலாபிஷேக விழாவில் மஹா கும்பாபிஷேக மலர் வெளியீடும், சைவப்பெரியார்கள் கௌரவிப்பும் நடைபெறவிருக்கின்றன.

ஆலய திருப்பணிச் சபைத் தலைவர் திரு. எஸ். விஜ முருகேசு தலைமையில் நடைபெறும் இந்த விழாவில் காரைநகர் கிழக்கு இந்து வாலிபர் சங்கச் செயலாளர் திரு. ஐ. தி. சம்பந்தன் அறிமுகவுரை நிகழ்த்துவார்.

கலாநிதி ப. கோபாலகிருஷ்ணன், பிரம்மஸ்ரீ ந. வீரமணி ஐயர் ஆகியோர் கௌ

(7 ஆம் பக்கம் பார்க்க)

### நாட்டுக்கூத்து

யாழ்ப்பாணம் மார்ச்16 முல்லைநாட்டார் வழக்கியல் பாதுகாப்புக் கழக நிதிக்காக முல்லை அரசாங்க அதிகாரிகளும் ஆசிரியர்களும் வழங்கும் ''சிலப்பதிகாரம் தந்த கோவலன் நாட்டுக்கூத்து 18ஆம் திகதிபி. ப. 6.30 இரவு 10மணி வரை முள்ளியவளை வித்தியானந்தக் கல்லூரி திறந்த வெளி அரங்கிலும் 19 ஆம் திகதி பி. ப. 6.30 இரவு10 வரைபுதுக்குடியிருப்பு மகா வித்தியாலய முன்றலிலும் 20 ஆம் திகதி பி. ப. 6.30 இரவு10மணிவரை முல்லைத்தீவு திறந்த வெளி அரங்கிலும் 23 ஆம் திகதி கற்சிலைமடு மகா வித்தியாலயத்திலும் நடைபெறும்.

நாட்டுக்கூத்தை முல்லைத்தீவுக் கச்சேரி நிர்வாக அதிகாரி திரு. செ. மெற்றாஸ் மெயில் தயாரித்துள்ளார் அண்ணாவியார் வே. சுப்பிரமணியம் இசை, ஆட்டம், அமைப்பைக் கவனித்துள்ளார். (க)

### ஆரம்பக் கலைவிழா

யாழ்ப்பாணம் மார்ச் 16 பணிப்புலம் அம்பாள் சனசமூக நிலையத்தின் 8 ஆம் ஆண்டின் ஆரம்பக்கலை விழாவும் பொதுக்கூட்டமும் எதிர் வரும் 18 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நிலையமுன்றலில் நடைபெறவுள்ளது.

பொதுக்கூட்டம் செல்வன் அ. முரளீதரன் தலைமையிலும் கலைவிழா செல்வன் எஸ். யாதவன் தலைமையிலும் நடைபெறும். (இ)

போதிய நிதி இன்மையால்

# ரூ. 15 ஆயிரம் நிவாரண விண்ணப்பங்கள் தேக்கம்

யாழ்ப்பாணம் மார்ச் 16 யாழ்மாவட்டத்தில் வீடமைப்பு நிவாரணம் வழங்க போதிய நிதி இல்லை இதனால் இந்த நிவாரணத்துக்காக விண்ணப்பித்தவர்களின் விண்ணப்பங்கள் தேங்கிக் கிடக்கின்றன.

யாழ். அரசாங்க செயலக அதிபர் ஒருவர் இதனைத் தெரிவித்தார்.

யாழ்மாவட்டத்தில் கடந்த கால வன்செயல்களால் சேதமடைந்த சுமார் 50 ஆயிரம் வீடுகளை புனரமைக்க நிவாரணத்தொகையாக தலா 15 ஆயிரம் ரூபா வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டது.

இவற்றுக்காக கிடைத்த விண்ணப்பங்களில் முன்னுரிமை அடிப்படையில் முழுமையாக பூர்த்தி செய்யப்பட்ட 1000 விண்ணப்பங்களே நிதி இன்மையால் தேங்கிக்கிடக்கின்றன.

இந்த ஆயிரம் விண்ணப்பங்களுக்கும் நிவாரணம் வழங்க 150 இலட்சம் ரூபா தேவை ஆனால் ஐம்பது இலட்சம் ரூபாதான் வந்தது. இந்நிலையில் நிதிகோரி மாகாணசபைக்கு செயலகஅதிகாரிகள் கடிதம் எழுதியுள்ளனர். (இ-3)

## மலையக மரக்கறிகளின் இடத்தை யாழ். மரக்கறிகள் இப்போது நிரப்புகின்றன

வவுனியா மார்ச் 16 கண்டியிலிருந்து பெறப்படுகின்ற லீக்ஸ், கரட், கிழங்கு போன்ற மரக்கறி வகைகளுக்குத் தற்போது வவுனியாவில் தட்டுப்பாடு நிலவுவதாக காய்கறி வர்த்தக வட்டாரங்கள் தெரிவித்தன.

தற்போது கிழங்கும் கரட்டும் யாழ் மாவட்டத்தில் இருந்து வவுனியாவிற்கு தாராளமாக வருவதனாலேயே இந்த நிலைமை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

யாழ் கிழங்கு கிலோ 10 ரூபாவுக்கு மொத்த விலையில் கிடைக்கின்றது. இதேபோல 10, 12 ரூபாவுக்கு யாழ் கரட்டும் விபாபாரிகளுக்கு கிடைக்கின்றது.

ஆனால் கண்டியில் இருந்து கிடைக்கும் கிழங்கின், மொத்த விலை 16 ரூபாவும் அதற்கு மேலேயும் கரட்டின் நிலைமையும் அதே தான்.

இதனால் அங்கிருந்து வரும் லீக்சையோ அல்லது கோவாவையோ கொண்டு வருவதற்கு வியாபாரிகளுக்கு கட்டுப்படியாகவில்லை என்று கூறப்படுகிறது.

இதனால் தென்பகுதி காய்கறி லொறிகளின் வருகையில் பெரும் விழ்ச்சி ஏற்பட்டுள்ளதாகவும் அதன் காரணமாக லீக்சுக்கு வவுனியா சந்தையில் பெரும் தட்டுப்பாடு நிலவுவதாகவும் வர்த்தக வட்டாரங்கள் தெரிவித்தன. (இ 164)

### முதல் உதவி பயிற்சி வகுப்பு

மானிப்பாய் மார்ச் 16 மானிப்பாய் மாதர் கிராம அபி விருத்திச் சங்கத்தினரால் ஒழுங்கு செய்யப்பட்ட முதலுதவி பயிற்சி வகுப்புக்கள் நாளை சனிக்கிழமை பி. ப. 4. 00 மணிக்கு மானிப்பாய் மெமோறியல் ஆங்கில பாடசாலையில் நடைபெற உள்ளது. (க 90)

## யாழ்ப்பாண நகரில் மண்டப வசதி வேண்டும்

### எழுத்தாளர்கள் கோரிக்கை

யாழ்ப்பாணம் பெப் - 16 யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த எழுத்தாளர்கள், கலைஞர்கள் போன்றவர்கள் நமது ஒன்று கூடல், கலந்துரையாடல் நிகழ்ச்சிகளை, விழாக்களை நடத்துவதற்கு யாழ் மாநகர சபை மண்டப வசதி செய்து கொடுக்க வேண்டும்.

இவ்வாறு எழுத்தாளர்கள் பலரும் யாழ். மாநகர ஆணையாளர் திரு. கே. பாலசிங்கத்திடம் வேண்டுகோள் விடுத்தனர்.

மலையகம் மற்றும் தென்னிலங்கையிலிருந்து யாழ்ப்பாணம் வந்திருந்த தமிழ் எழுத்தாளர்களுக்கு மாநகர சபை ஆணையாளர் கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை தேநீர் விருந்துபசாரம் அளித்துக் கௌரவித்தார்.

திரு. தெளிவத்தை யோசெப் தலைமையிலான எழுத்தாளர்கள் குழுவை யாழ். எழுத்தாளர்கள், இலக்கிய ஆர்வலர்கள் பலரும் அப்போது வரவேற்றுப் பேசினார்கள்.

அவர்களின் பலரும், எழுத்தாளர்கள், கலைஞர்களுக்கு மண்டப வசதி செய்து தருமாறு கோரிக்கை விடுத்தனர். நல்லூர் கல்யாண மண்டபத்தை மாற்றி அமைத்தோ அல்லது யாழ். நவீன சந்தையில் பயன்படுத்தப்படாமல் இருக்கும் மண்டபத்தையோ மாநகரசபை வசதி செய்து, குறைந்த கட்டணத்தில் வழங்கி உதவ வேண்டும். என ஆலோசனைகள் கூறப்பட்டன.

யாழ்ப்பாணத்தின் வரலாற்றை இயம்பும் நூல்கள் அருகிப் போகாமல் அவற்றை மீள்பிரசுரம் செய்தல், பௌர்ணமி கலை நிகழ்ச்சிகளை நடத்துதல், இலக்கிய ஆக்கங்களுக்கு வருடாந்தம் பரிசு வழங்குதல் ஆகிய பணிகளிலும் மாநகரசபை ஈடுபட வேண்டும் என்றும் கோரிக்கை விடுக்கப்பட்டது.

மலையக தென்னிலங்கை எழுத்தாளர்களுக்கு யாழ்ப்பாண மக்கள் சார்பில் அளிக்கப்பட்ட வரவேற்பாக அன்றைய நிகழ்ச்சி அமைந்ததெனப் பலரும் தெரிவித்தனர்.

யாழ் எழுத்தாளர்கள், இலக்கிய ஆர்வலர்கள் சார்பில் திரு. செங்கை ஆழியான், திரு. இ. ஜெயராஜ், திரு. டொமினிக் ஜீவா திரு. வ. இராசையா, நெல்லை க. பேரன் ஆகியோர் வரவேற்றுப் பேசினர்.

விருந்தினர் எழுத்தாளர்கள் சார்பில் திரு. தெளிவத்தை ஜோசப், திரு. அந்தனி ஜீவா, மேமன் கவி ஆகியோர் நன்றி தெரிவித்துப் பேசினர். (அ)

## சிறிமாபுரவில் சிங்களவர் மீளக்குடியேற முயற்சி?

திருகோணமலை, மார்ச் 16 திருகோணமலை நகரிலிருந்து அமைதிப்படையினர் விலகிக்கொண்டிருக்கும் இவ்வேளையில் இடம் பெயர்ந்த சிங்கள மக்கள் மீண்டும் தங்கள் இடங்களில் மீளக் குடியேறுவதற்கான ஆயத்தங்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

இதன் முன்னோடியாக 'பிரட்ரிக்' கோட்டையில் தங்கியிருக்கும் சிங்கள அகதிகளில் சுமார் 50 பேர் சிறிமாபுர பகுதிக்குச் சென்று சேதமாக்கப்பட்ட வீடு வாசல்களைப் பார்வையிட்டு வந்துள்ளனர்.

இப் பகுதியில் இப்போது இலங்கைப் பொலீஸார் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். இதனால் சிங்கள மக்கள் எதுவித பயம், பீதியின்றி நடமாடுவதைக் காணக்கூடியதாக இருக்கிறது.

நகரின் ஏனைய பகுதிகளிலும் சிங்கள மக்களின் நடமாட்டம் இப்போது அதிகரித்துக் காணப்படுகிறது.

### கலந்துரையாடல்

யாழ்ப்பாணம் மார்ச் 16 தெல்லிப்பழை கலை இலக்கியக்களத்தின் 27 ஆவது ஒன்றுகூடல் 17 ஆம் திகதி சனிக்கிழமை பி. ப. 3. 15க்கு திருமதி கோகிலா மகேந்திரன் தலைமையில் நடைபெறும்.

ஒன்றுகூடலில் திரு. க. சிதம்பரநாதனுடன் நாடகச் சிந்தனைகள் பற்றிய கலந்துரையாடல் நடைபெறும. (க)

### களஞ்சியப் பொறுப்பாளர்

கொழும்பு மார்ச்16 களஞ்சியப் பொறுப்பாளர்களாக 1987 ம் ஆண்டு ஜலை தொடக்கம் 1989 டிசம்பர் வரை 1766 சிங்களவர்களும் 77 தமிழர்களும் 34 முஸ்லிம்களும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இவ்வாறு பொதுநிர்வாக மாகாணசபை உள்நாட்டலுவல்கள் அமைச்சர் நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

தமிழர் விடுதலைக் கூட்டணி உறுப்பினர் திரு. மாவை சேனாதிராசா உள்நாட்டு அலுவல்கள் அமைச்சரை கேட்ட வாய்மொழி மூல விடைக்கான வினாவுக்கு பதிலளித்து பேசுகையிலேயே அவர் அவ்வாறு தெரிவித்தார். (க-2)

## ஆளுநரின் அறிக்கை கிடைத்ததும் மாகாணசபை கலைக்கப்படும்?

கொழும்பு, மார்ச் 16 ஆளுநரின் அறிக்கை கிடைத்த பின்னர் வடக்கு-கிழக்கு மாகாண சபையைக் கலைப்பது பற்றிய விஷயத்தில் அரசியல் அமைப்புக்கு இணங்க ஜனாதிபதி பிரேமதாஸா நடவடிக்கை எடுப்பார்,

அமைச்சர் ரஞ்சன் விஜேரத்தினா, நாடாளுமன்றத்தில் கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

சுதந்திரக் கட்சி எம். பி. தர்மசிறி சேனநாயக்காவின் கேள்விக்குப் பதிலளித்த அமைச்சர் மேலும் சொன்னதாவது:-

ஆறாவது அரசமைப்புச் சட்டத் திருத்தத்தை ரத்துச் செய்ய வேண்டும் என்று விடுதலைப் புலிகள் கோருவது இரகசியமானது ஒன்றல்ல.

ஏனைய விஷயங்களைப் போன்று இக்கோரிக்கையையும் அரசு பரிசீலனை செய்து வருகிறது.

இது சம்பந்தமாக ஜனாதிபதி இன்னும் ஒரு முடிவுக்கும் வரவில்லை.

எல்லோரும் எதிர்பார்த்தபடி திரு. வரதராஜப் பெருமாள் வெளியேறிவிட்டார். அவர் இந்தியாவில் இருப்பதாகச் சிலர் சொல்கிறார்கள். ஆனால் அதுவும் சரியாகத் தெரியவில்லை.

ஈ.பி.ஆர்.எல்.எவ்.பின் 19 யோசனைகள் குறித்து இனி யாருடன் பேச்சு நடத்துவது? அவர் போன இடத்துக்குச் சென்று இது சம்பந்தமாகப் பேச்சுக்கள் நடத்த எம்மால் முடியாது- என்று அமைச்சர் ரஞ்சன் விஜேரத்தினா மேலும் சொன்னார். (ஒ-எ)

## நாணய மாற்று விகிதம்

14-3-1990

இலங்கை மத்திய வங்கிக்கும் வர்த்தக வங்கிகளுக்கும் இடையிலான உடன் மாற்றுவிகிதம்:-

| | | வாங்குதல் | விற்றல் |
|---|---|---|---|
| 100 | இந்திய ரூபா | 233 70 | 234.67 |
| 100 | அமெரிக்க டொலர் | 3997.45 | 4002.55 |
| 100 | ஸ்ரேர்லிங் பவுண்ட் | 6426.60 | 6456.33 |
| 100 | ஜேர்மன் மார்க் | 2331.44 | 2349.20 |
| 100 | பிரெஞ்சு பிராங் | 684.98 | 699.26 |
| 100 | ஜப்பானிய யென் | 26.1909 | 26.4392 |

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## வாசகர் திருமுகம்

### நுளம்புத் தொல்லை

யாழ்ப்பாணத்தில் காணப்படும் கழிவு நீர் வாய்க்கால்களுக்கு பல மாதங்களாக நுளம்புக் கொல்லி மருந்துகள் பிரயோகிக்கப்படவில்லை, இதனால் நுளம்புகளின் பெருக்கம் அதிகமாக காணப்படுகிறது. இதனால் மக்களுக்கு ஆபத்தான நோய்கள் பரவக்கூடிய சாத்தியக்கூறுகள் தென்படுகின்றன. சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுப்பார்களா?

கே. கணேசகுமார்
யாழ்ப்பாணம்.

### கல்விப் பணிப்பாளர் கவனிப்பாரா?

1989 ஆகஸ்ட் மாதம் தொடக்கம் நியமிக்கப்பட்ட ஆரம்ப விஞ்ஞான பட்டதாரி ஆசிரியர்களது சேவை முன் பயிற்சி கால வேதனம் வழங்க வேண்டுமென்று எல்லா மாவட்டக் கல்விப் பணிப்பாளர்களுக்கும் சுற்று நிருபம் அனுப்பப்பட்டு ஏனைய மாவட்டங்களில் இவ் வேதனம் வழங்கப்பட்டு விட்டதாக அறிகிறோம்.

நாமும் அதைப் பெற்றுக் கொள்ள யாழ் கல்வி பணிப்பாளர் ஆவன செய்வாரா?

ஓர் ஆரம்ப ஆசிரியர்
வட்டுக்கோட்டை

### சனசமூக நிலையம் சீர்குலைவதேன்?

வண்ணார் பண்ணையில் ஐயனார் கோவிலடிக்கு அருகாமையில் உள்ள ''ஐயனார் கோவிலடி சனசமூகநிலையம்'' சீர்குலைந்து இருக்கிறது. இங்கு ஒரு சில பத்திரிகைளே வைக்கப்படுகின்றன. காலையில் வைக்கப்படும் பத்திரிகைகள் மாலையில் களவாடப்படுகின்றன. அத்துடன் அங்கு இருக்கும் நூல் நிலையமும் திறக்கப் படுவதில்லை.

இதனை நிர்வாகிகள் கவனத்திற் கொள்வார்களா?

எஸ். வி. சுரேந்திரராஜன்
வண்ணார்பண்ணை

### அனலைதீவு வீதிகள்

அனலை தீவு பிரதான வீதிகள் பல வருடங்களாகத் திருத்தி யமைக்கப்படவில்லை இவ் வீதிகள் குன்றும் குழியுமாக மிகவும் கேவலமான நிலையில் உள்ளன. துறைமுகத்தில் இருந்து வரும் பயணிகளும் மற்றும் துவிச்சக்கர வண்டிகளும் வாகனங்களும் செல்ல முடியாமல் உள்ளன.

இவ்வீதிகள் பற்றிய அவல நிலையை அறிந்தும் அரச அதிகாரிகள் கவனம் செலுத்தவில்லை. சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இவ் வீதியைத் திருத்தி அமைப்பார்களா?

வி. குணசிலன்
அனலைதீவு.

## கண்டதும் கேட்டதும்

யாழ்ப்பாணத்தில் தற்போது பொதுமக்கள் அதிக அளவில் கூடும் அலுவலகங்கள் இரண்டு. ஒன்று கல்விக்கந்தோர். மற்றது அரச செயலகம்.

கல்விக் கந்தோருக்கு நியமனங்கள் தொடர்பாகவே பலர் சென்று வருவதைக் காணக்கூடியதாக இருக்கிறது. அரச செயலகத்துக்குச் செல்வோரில் பெரும்பாலானோர் நிவாரணம் தொடர்பாகவே செல்கின்றனர்.

இவர்கள் தமது பிரச்சினைகளைத் தெரிவிப்பதற்காக உயர் அதிகாரிகளைச் சந்திப்பதற்கு நீண்ட நேரம் காத்திருக்க வேண்டி இருக்கிறது. சிலர் தமது தேவைகள் சம்பந்தப்படாத அதிகாரிகளிடமும் சென்று விடுகிறார்கள்.

இந்த இரு அலுவலகங்களிலும் உள்ள பெரிய குறை பொதுசனத் தொடர்பு அதிகாரி ஒருவர் இல்லாததே.

பொதுமக்கள் தமது தேவைகளை இலகுவில் பூர்த்தி செய்வதற்கு இப்படியான ஒருவர் அவசியம் தான்.

-செய்திலோலன்

# பண்டத்தரிப்பு கோட்ட பாடசாலை உடற்பயிற்சிப் போட்டி முடிவுகள்

சுழிபுரம் மார்ச். 16
பண்டத்தரிப்பு கோட்டப் பாடசாலைகளின் உடற்பயிற்சிப் போட்டி சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் 7-ஆம் திகதி முற்பகல் நடைபெற்றது.

வடமாநில கல்வி அதிகாரிகளும் உடற்பயிற்சி அதிகாரிகளும் இருபது பாடசாலைகளைச் சேர்ந்த முப்பதுக்கு மேற்பட்ட அணிகளும் மைதானத்தில் நிறைந்திருந்தனர்.

யாழ் மாவட்டத்தில் இருக்கும் ஐந்து கோட்டங்களின் போட்டிக்கு தெரிவு செய்யும் பண்டத்தரிப்பு கோட்ட தெரிவுப் போட்டியாக இத் தெரிவு இடம் பெற்றது. யாழ்ப்பணத்தில் நடைபெறும் போட்டியில் வெற்றி பெறும் முதல் பிரிவுக்கு ஷப்பிறா நிறுவனம் வழங்கும் வெற்றிக்கிண்ணம் வழங்கப் படவுள்ளது போட்டியில் தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகள் விவரம் வருமாறு:

**13 வயது பெண்கள் பிரிவு,**
முதலாம் இடம்; பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி
இரண்டாவது இடம்: கீரிமலை நகுலேஸ்வரா ம. வி.
மூன்றாம்இடம்: அருணோதயாக்கல்லூரி அளவெட்டி.

**17வயது பெண்கள் பிரிவு:**
முதலாம் இடம்: விக்றோறியாக் கல்லூரி சுழிபுரம்.
இரண்டாம் இடம்: யூனியன் கல்லூரி தெல்லிப்பழை.
மூன்றாஇடம்; மல்லாகம் ம. வி. பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி.

**19 வயது பெண்கள் பிரிவு:**
முதலாம் இடம் வட்டுக்கோட்டை இந்துக்கல்லூரி.
இரண்டாம் இடம்: விக்ரோறியாக்கல்லூரி சுழிபுரம்.
மூன்றாவது இடம்: இளவாலைகன்னியர்மடம் ம. வி.

**13 வயது ஆண்கள் பிரிவு:**
முதலாம்இடம்: சங்கானை சிவப்பிரகாச ம. வி
இரண்டாவதுஇடம்அராலி சரஸ்வதி ம.வி
மூன்றாவது இடம்: சுழிபுரம் வடக்கு ஆறுமுக வித்

**17 வயது ஆண்கள் பிரிவு**
முதலாவது இடம்: அராலி இந்துக்கல்லூரி
இரண்டாவது இடம்: நடேஸ்வராக் கல்லூரி காங்கேசன்துறை
மூன்றாவது இடம் ; சங்கானை சிவபிரகாச ம. வி. மல்லாகம் ம. வி.

**19 வயது ஆண்கள் பிரிவு:**
முதலாவது இடம்: அராலி இந்துக் கல்லூரி
இரண்டாம் இடம் : சங்கானை சிவப்பிரகாச ம. வி.
மூன்றாம் இடம்: காங்கேசன்துறை நடேஸ்வராக் கல்லூரி.

(க-28)

## கொடிகாமம் கொத். பாடசாலை உடற்பயிற்சி போட்டி முடிவு

மானிப்பாய் மார்ச் 16
கொடிகாமம் கொத்தணிப் பாடசாலைகளின் உடற் பயிற்சி போட்டிகள் அதிபர் திரு. எஸ். சின்னத்தம்பி தலைமையில் நடைபெற்றன.

உடற்பயிற்சி வட்டாரக் கல்வி அதிகாரி திரு. அருணகிரிராசா பிரதம விருந்தினராக கலந்து கொண்டார்.

போட்டி முடிவுகள் வருமாறு:

**13 வயது ஆண்** 1. கொடிகாமம் திருநாவுக்கரசு ம. வி. 2. கொடிகாமம் அரசினர் வித்தி.

**13 வயது பெண்** 1. கொடிகாமம் திருநாவுக்கரசு ம. வி 2. கொடிகாமம் அரசினர் வித்தி. 3. மந்துவில் ஸ்ரீபாரதி வித்தி.

**17 வயது ஆண்** 1. கொடிகாமம் திருநாவுக்கரசு ம. வி. 2. கொடிகாமம் அரசினர் வித்தி. 3. மந்துவில் ஸ்ரீபாரதி வித்தி.

**17 வயது பெண்** 1. கொடிகாமம் திருநாவுசரசு ம. வி. 2. கொடிகாமம் அரசினர் வித்தி. 3. அல்லாரை அரசினர் வித்தி.

**19 வயது ஆண்** 1. கொடிகாமம் திருநாவுக்கரசு ம. வி.

**19 வயது பெண்** 1. கொடிகாமம் திருநாவுக்கரசு ம. வி.

( க – 90 s

## மட்டுவில் கொத்தணி விளையாட்டுப் போட்டி

சாவகச்சேரி மார்ச் 16
மட்டுவில் கொத்தணிப் பாடசாலைகளுக்கிடையிலான இல்ல மெய்வல்லுநர் போட்டிகள் கொத்தணி அதிபர் திரு. க. பேரம்பலம் தலைமையில் நடைபெற்றன,

யாழ் கோட்டக் கல்வி அதிகாரி திரு. சி. தியாகராசா பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டார்.

மஞ்சள் இல்லம் முதலாவது இடத்தையும் நீலம், சிவப்பு இல்லங்கள் முறையே 2 ஆம் 3 ஆம் இடங்களைப் பெற்றன. பிரதம விருந்தினர் வெற்றி பெற்றோருக்கான பரிசில்களை வழங்கினார்.

(க-31

## மட்டுவில் கொத்தணி போட்டிகள்

சாவகச்சேரி, மார்ச் 16
மட்டுவில் கொத்தணிப் பாடசாலைகளின் உடற்பயிற்சிப் போட்டிகள் மட்டுவில் மகாவித்தியாலய மைதானத்தில் கொத்தணி அதிபர் திரு. க. பேரம்பலம் தலைமையில் நடைபெற்றன. உடற்கல்வி அதிகாரி திரு. க. அருணகிரிநாதன் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார்.

பின்வரும் பாடசாலைகளின் உடற்பயிற்சிப் போட்டிக் குழுக்கள் முதல் இடங்களைப்பெற்றன.

13 வயது ஆண்: மட்டுவில் தெற்கு சரஸ்வதி கனிஷ்ட வித்தியாசாலை

13 வயது பெண்: மட்டுவில் மகாவித்தியாலயம்.

17 வயது ஆண், பெண், 19 வயது ஆண், பெண் பிரிவுகளில் மட்டுவில் மகாவித்தியாலயம் முதல் இடங்களைப் பெற்றன.

(க-13)

## வருடாந்த விளை. போட்டி

சாவகச்சேரி மார்ச் 16
நுணாவில் அ. த. க. பாடசாலையின் வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டிகள் அதிபர் திரு இ. மெய்யழகன் தலைமையில் நடைபெற்றன.

சாவகச்சேரி நகர கொத்தணி அதிபர் திரு. க. பாலச்சந்திரன் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டார்.

போட்டிகளில் பச்சை இல்லம் முதலாம் இடத்தையும் மஞ்சள், சிவப்பு இல்லம் முறையே 2 ஆம் 3 ஆம் இடங்களையும் பெற்றன.

திருமதிகள் வி. நாகேஸ்வரி, வி. சோமசுந்தரம் ஆகியோர் பரிசில்களை வழங்கினர்.

(க-31)

## ஷப்றா அணி வெற்றி

யாழ்ப்பாணம் மார்ச் 16
வர்த்தகவங்கி யாழ். கிளை, ஹட்டன் நாசனல் வங்கி யாழ் கிளை கூட்டு அணியுடனான சிநேகபூர்வ 40 ஓவர்சள் கிரிக்கெட் போட்டியில் ஷப்றா அணி 44 ஓட்டங்களால் வெற்றி பெற்றது.

முதலில் ஆடிய ஷப்றா அணி 158 ஓட்டங்களைப் பெற்றது. விஜயகுமார் 47, வீரசிங்கம் 34, இளங்கோ 20' ஜெயந்தன் 17, வித்தியாதரன் 14, குலசிங்கம் 11, ஓட்டங்களை பெற்றனர்.

உபாகாந்தன் 3 விக்கட்டுகளையும், ராஜ்மனோகரன், நவக்குமார் ஆகியோர் தலா இரண்டு விக்கட்டுகளையும், ஜெயபாலன், ரஜீவன் ஆகியோர் ஒவ்வொரு விக்கட்டையும் கைப்பற்றினார்.

தொடர்ந்து ஆடிய வங்கி கிளைகள் கூட்டு அணி 114 ஓட்டங்களைப் பெற்றது. ரஜீவன் 41, மொக்காந்தன் 24 ஜெயபாலன் 18, சிவதாசன் 12 ஓட்டங்களைப் பெற்றனர். இளங்கோ 3விக்கட்டுகளையும், முருகவேள், நித்தியராஜன், பத்மஜெயந் மூவரும் தலா இரண்டு விக்கட்டுகளையும் ஜெயந்தன் ஒரு விக்கட்டையும் கைப்பற்றினர்.

சிறந்த ஆட்டக் காரருக்கான பரிசை உமாக்காந்தன், உதயன் நிர்வாக இயக்குனர் திரு. இ. சரவணபவன்விடமிருந்து பெற்றுக் கொண்டார்.

(க)

## இந்துசமய பாரதி முதலிடம்

மானிப்பாய் கொத்தணி மட்டத்தில் நடைபெற்ற உடற்பயிற்சிப் போட்டிகளில் ஆறு பிரிவுகளில் ஐந்து பிரிவுகளில் சுதுமலை இந்துசமய பாரதி வித்தியாசாலை முதலிடம் பெற்றுள்ளது.

மற்றய இடத்தை மானிப்பாய் மெமோறியல் ஆங்கில பாடசாலை பெற்றுக் கொண்டது.

(இ-9)

மக்கள் முகம்

## முல்லைத்தீவில் முதலாவது மாணவி

யாழ்ப்பாணம், மார்ச் 16
முள்ளியவளையைச் சேர்ந்தவரும், முல்லைத்தீவு றோ. க. பாடசாலை மாணவியுமான செல்வி உதயப்பிரியா உதயசங்கர், 1989 ஆம் ஆண்டிற்கான 5 ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் முல்லைத்தீவு மாவட்டத்தில் முதலாவது மாணவியாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.



(க)

## யாழ் பல்கலை வரலாற்று கழக நிர்வாகிகள்

யாழ்ப்பாணம், மார்ச் 16
யாழ். பல்கலைக்கழக வரலாற்றுக் கழகத்தின் நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவாகியுள்ளனர்:

போசகர்:' பேராசிரியர் எஸ். பத்மநாதன், பெருந்பொருளாளர்: திரு. எஸ். கிருஸ்ண ராஜா, மன்றத்தலைவர்: செல்வன் கே. சிவகணேசன், மன்றச்செயலாளர் திருமதி. பி. டால்விகா, மன்றப் பொருளாளர்: செல்வி எம். பஞனாஸ், உப தலைவர்: ஈ. சறோஜினிதேவி, உப செயலாளர்: செல்வன் எஸ். எம். சபீக், பத்திராதிபர்: எஸ். யேசுநேசன், செயற்குழுஉறுப்பினர்கள் [ஐவர்]: செல்வன் ரி. அருணகிரிநாதன், செல்வி எஸ். மனோகரி, ஐ. மேரி திரேசா, கே. ரஜனி, எஸ். பத்மாவதி ஆகியோர்.

(க)

---

## முதலாவது பிறந்தநாள் வாழ்த்து



### செல்வன் Y. தீபன்

கனடாவைச் சேர்ந்த யோகநாதன் - தயாதேவி தம்பதியினரின் அன்புச் செல்வன் தீபன் இன்று (16 - 03 - 1990) குதூகலமாக கனடாவில் தனது முதலாவது பிறந்த நாளைக் கொண்டாடுகின்றார்.

தீபனை முத்துமாரி அம்பாள் துணையுடன் சகலதும் பெற்று பல்லாண்டு காலம் வாழ்கவென கனடாவில் இருக்கும் அப்பா, அம்மா, சித்தப்பா, அத்தை சூராவத்தையில் இருக்கும் அம்மையா, அம்மம்மா. மாமாமார். சித்தி, மாமி. அத்தான், மச்சான்மார், உரும்பிராயில் இருக்கும் அப்பம்மா, மாமா, இருபாலை மாமா. அத்தை, டென்மார்க் மாமா, மாமி, மச்சாள், சிங்கப்பூர் மாமா, லண்டன் பெரியப்பா. பெரியம்மா, அத்தை யாவரும் வாழ்க வாழ்க என வாழ்த்துகின்றோம்.

ஊரிசாட்டி, சூராவத்தை,
சுன்னாகம்.

[2783]

---

## அறிவித்தல்


லங்கா ஆயுர்வேத மருத்துவக் கல்லூரி இறுதி D. A. M. பரீட்சைக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது. விண்ணப்பதாரர்கள் உடனடியாக கல்லூரி காரியாலயத்துடன் தொடர்பு கொள்ளும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

கௌரவ செயலாளர்
வட இலங்கை சுதேச வைத்தியசபை.

( 2799 )

---

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



### திரு. பொ. பூபாலசிங்கம்

தோற்றம்: 9-10-1936   மறைவு: 27- 3-1989

எங்கள் அன்புத் தெய்வமே!
நீங்கள் விண்ணுலகம் சென்று ஓராண்டாயினும்
உங்கள் நினைவலைகள் இன்றும்
நினைவிழக்கவில்லை இடை நடுவில்
நீங்கள் எங்களை விட்டு பறிக்கப்பட்டதை.
பாருலகம் உள்ளவரை ஓராண்டென்ன
ஓராயிரம் ஆண்டு போயினும் மறவோம்
உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனை வேண்டுகிறோம்

உங்கள் பிரிவால்
வாடும்.
மனைவி, பிள்ளைகள்

(2800)

---

## கொம்பியூட்டர் கல்வி

Basic Programming Course
New Batch 17 - 03 - 1990 (Sat&Sun) 8 - 30 a.m

I D P COMPUTER CENTRE
342, K. K. S Road Jaffna.
(சிவன்கோவிலடி)

(4026)

---

தராதரம் பெற்ற கண் பரிசோதகரும்,
பல் கட்டுபவரும்

**வி. ரி. அன் சன்ஸ்**
317, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.

முகாமையாளர்:-
டாக்டர். றெஜி சொலமன்
(கட்டிட பொருட்கள் கூட்டுத்தாபனம் முன்பாக)

(சி/4031)

---

## விற்பனைக்கு

1. சொலிட் மின்மோட்டர்.
2. வில்லியர்ஸ் நீர் இறைக்கும் இயந்திரம் [England]
3. எஸ்லோன் பைப்புகள், C. I. C அல்கதீன் பைப்புகள்

மற்றும் மின்சாரப் பொருட்களுக்கு
நாடவேண்டிய ஸ்தாபனம்.

**வசந்தி எலக்றிக்கல்ஸ்**
110, கே. கே. எஸ் வீதி
சுன்னாகம்.

[சி/4025]

---

# New Science Academy

In Front of B. M. C   Kannathiddy,
Jaffna.

**90 A/L**
**EVENING CLASS**
CHEMISTRY
By
★ V. செல்வரஞ்சன் ★

GENERAL
Tue → 3.30 – 6.00 p.m.
PHYSICAL (இரசாயனச் சமநிலை)
Wed → 3.30 — 6.00 p.m.
ORGANIC (அங்கிகள்)
Thu → 3.30 – 6.30p.m.

**Weekend**
**PAPER CLASS**
10.30 a.m. → 11.30 a.m.
BASIC பிரிவு II
Mon & Fri → 4.00 – 5.00 p.m.
BASIC
ஆரம்பம்: 19-3-90

**91 A/L**
Sat & Sun
IN ORGANIC
ஆரம்பம்: 17-03-90

[சி-3449]

---

## புதிய உயர் கல்லூரி

ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.

(வெளிவாரிப் பட்டப்படிப்புக்கள்)

**G. A. Q. - 91**

A/L இல் 3 பாடங்களில் சித்தியடைந்தவர்களும் விண்ணப்பிக்கலாம்.

இதற்கான பல்கலைக்கழக பதிவுகளை எமது நிறுவனத்தில் செய்து கொள்ளவும்.

விரிவுரையாளர்கள்:

| | | |
|---|---|---|
| பொருளியல் | — | குமாரவேல் |
| புவியியல் | — | குணராஜா |
| தமிழ் | — | குழந்தை |
| இந்து நாகரிகம் | — | அருள்நங்கை |
| அரசியல் | — | குமார் |
| மெய்யியல் | — | சயந்தன் |

விண்ணப்பப் படிவங்களை முன்கூட்டியே பெற்றுக் கொள்ளவும்.

நிர்வாகி,
S. அருள்நங்கை

(சி-4009)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காரைநகர் - திக்கரை முருகமூர்த்தி கோயில் மண்டலாபிஷேக மலர்

## இறை வழிபாட்டிற்கு வழிவகுக்கும் கும்பாபிஷேகம்

இறைவனை வழிபடுதல் மனித வாழ்க்கைக்கு மிகவும் இன்றியமையாதது. உடல் நலம் பெற்று வாழ உணவு தேவைப்படுவது போன்று உயிர் நலம் பெற இறைவழிபாடு மிகவும் தேவையாகும். ஆன்மீக வாழ்வு வளம்பெறவும் வழிபாடு துணை செய்யும். 'தனக்குவமை இல்லாதான் தாள்' சேர்ந்த வழிபாட்டின் உயர் பயன்பாடாகும். இவ்வழிபாட்டுக்கு வழி வகுப்பதே திருக்கோயில். இத்திருக்கோயிலில் இறைவனைச் சாந்நித்தியம் கொள்ளச் செய்யும் பெருஞ்சாந்தியே கும்பாபிஷேகம் ஆகும். எமது ஆகமப் பண்பாட்டைப் பேணிப்பாதுகாக்க இக்கிரியை பெரிதும் துணைபுரிய வல்லது.

ஆலயத்திலே இறைவனின் தெய்வ சாந்நித்தியம் நிறைந்து விளங்குவதால் வழிபாடு செய்வதற்கு அதுவே பொருத்தமான இடமாகும். எனவே ஆன்றோர்கள் ஆலயத்தைப் போற்றி வந்துள்ளனர். எமது அங்கங்கள் அனைத்தும் வழிபாட்டிற்கென்றே உருவாகின என்ற உயர் கருத்தை அப்பர் வற்புறுத்துகின்றார்.

'தலையே நீ வணங்காய்;
கண்காள் காண்மின்களோ;
செவிகாள் கேண்மின்களோ
மூக்கே நீ முரலாய்;
வாயே வாழ்த்துக் கண்டாய்;
நெஞ்சே நீ நினையாய்;
கைகாள் கூப்பித் தொழீர்
ஆக்கையாற் பயனென்
கால்களாற் பயனென்;

என்று ஒவ்வொரு அங்கங்களோடும்இறைவழிபாட்டினை இணைத்துக் கூறியுள்ளமை சிந்தனைக்குரியது.

இறைவன் பரிபூரணமானவன்; நித்தியமானவன்; அருள்மயமானவன்; அடியார்களை ஈர்த்து ஆட்கொள்ளும் பெற்றியன்; தூய்மையானவன். இத்தகைய சிறப்பான பண்புகளைக் கொண்டு தடத்தநிலையில் இறைவன் ஆலயங்களில் எழுந்தருளுகின்றான். எனவே ஆலயங்களை இறைவனுக்கெனத் தூய்மையாகவும் புனிதமாகவும் பேணிப்பாதுகாத்தல் அவசியமாகின்றது. பூவின் கண் மணம் போலவும் தீயின் கண் சூடும் ஒளியும் போலவும் சிறந்து விளங்கும் இறைவனை நாம் உணர்ந்து வழிபடவும் இவ்வாலயங்களே பெரிதும் உதவுவன. இவ்வாலயங்களைப் புதிதாக நிர்மாணிக்கும் போதும், உருவாகிய ஆலயங்கள் காலவெள்ளத்தால் பழுதடையும்போது அவற்றைத் திருப்பணி செய்து மீளப்புதுப்பிக்கும் போதும், நாளாந்தக் கிரியைகள் நடைபெறமுடியாது எதிர்பாராத விதமாகக் கேடுகள் விளையுமிடத்தும் நிகழ்த்தப்படுவதே கும்பாபிஷேகமாகும். இதன் பின்னரே தொடர்ச்சியான வழிபாடுகள் இறைவனுக்கென நிகழ்த்தப்படுகின்றன.

ஆலய நிர்மாணம் தொடக்கம் பிரதிஷ்டை வரை இடம்பெறும் பல படிமுறையான காரியங்களும் திருக்கோயிலின் சிறப்பினையும் வழிபடப்படும் மூர்த்தியின் பெருமையினையும் உணர்த்துகின்றன. ஆலயம் ஒன்றினை நாம் நிர்மாணிக்கும் பொழுது ஆகமங்கள், வாஸ்து சாஸ்திரம் ஆகியன கூறும் விதிமுறைகள் பின்பற்றப்படுகின்றன. கூடுதல் குறைதலின்றி அளவுப் பொருத்தத்துடன் அமையும் ஆலயமானது கர்ப்பகிருகம், விமானம், கோபுரம், மண்டபங்கள், பிரகாரம், பரிவாரக் கோயில்கள் ஆகிய அங்கங்களுடன் முழுமைபெற்று எழுச்சி பெறுகின்றது. அங்கு வழிபாட்டிற்கென அமையும் தெய்வத் திருவுருவங்கள் கலையெழிலுடனும் சாத்திரப் பிரமாணங்களுடனும் உருவாகின்றன. எனவே ஆலயத்தில் ஆகமங்கள், புராணங்கள், சிற்பசாத்திரங்கள் போன்ற நூல்கள் கூறும் மரபுவழிக் கருத்துக்கள் சங்கமமாவது குறிப்பிடத்தக்கது. ஆகமங்கள் விதித்துக் கூறும் கிரியைகள் பத்ததிகள் வழியாக கும்பாபிஷேகத்தின் போது முதன்மை பெறுகின்றன. மந்திரம், கிரியை, பாவனை ஆகிய மூன்றும் தெய்வத்திருவுருவத்தில் தெய்வீக சாந்நித்தியத்தை ஏற்படுத்துகின்றன. யாகசாலையில் இறைவனுக்கென நிகழ்த்தப்படும் வேத தோத்திர பாராயணம், நாதாஞ்சலி, பண்ணிசை, அடியார்களின் பக்திமயமான அரோகரா கோஷம் போன்றவையும் கும்பத்தின் வழியே திருவுருவத்தில் நிலைபேறு கொள்கின்றன. இத்தகைய சிறந்த வழிபாடுகள் நிகழ்ந்த பின்னரே கும்பத்தில் உள்ள புனித நீர் பிம்பத்தில் அபிடேகிக்கப்பட்டு அதனைத் தொடர்ந்து மகாபிஷேகம், மண்டலாபிஷேகம் ஆகியவை நிறைவேறுகின்றன. இதனை அடுத்து ஆலயத்தில் நித்திய நைமித்திய வழிபாடுகள் தொடர்ந்து நிகழ்வன.



கோயில்களில் நாம் நிகழ்த்தும் வழிபாடு எமது மனம், வாக்கு, காயம் ஆகிய மூன்றினையும் தூய்மையடையச் செய்கின்றன. எனவே தான் கோயில்கள் எமது பண்பாட்டின் சேந்திரமாக விளங்கி வருகின்றன மூர்த்தி, தல, தீர்த்தச் சிறப்புக்களினால் கோயில்கள் வழிபாட்டுப் பெருமைக்குரியவையாகின. தென்னாட்டில்பாடல் பெற்ற தலங்கள் சிறந்த வழிபாட்டுத் தலங்களாகவும் பெருமை பெற்றன. வழிபாட்டின் மேன்மையால் எமது உடம்பையேக் கோயிலாகக் கண்டுணர்ந்தனர் சிவநெறிச் சான்றோர்.

இத்தகைய சிறந்த ஆலய பண்பாடு காரைநகரிலும் காலங்காலமாக நிலவிவருகின்றது. இப்பண்பாடு மக்களைச் சமய நெறி சாந்து வாழ வழிவகுத்து வந்துள்ளது. காரைநகரில் சிறந்து விளங்கும் ஈழத்துச் சிதம்பரம் என்ற ஆலயத்தைப் பின்னணியாகக் கொண்டு சைவ மரபு மேம்பட்டு விளங்குவதோடு தென்னாட்டில் பேணப்படும் வழிபாட்டு ஐதீகங்களும் இடம்பெறுவது குறிப்பிடத்தக்கது. இத்தலத்தைப் போன்று பல முருகன் ஆலயங்களும் இங்கு சிறப்படைந்துள்ளன. இவ்வாறாகக் காரைநகரில் ஆன்றோர் பல ஆலயங்களை உருவாக்கி, ஆலயவழிபாட்டு மரபினைப் பேணும் வகையில் சிறந்து விளங்கியுள்ளனர். திருக்கோயில்களை திருப்பணி செய்து செப்பனிட்டு வழிபாட்டுக்கெனப் பேணிவந்துள்ளனர்.

இவ்வாலய வரிசையில் காரைநகர்திக்கரை முருகமூர்த்திக் கோயிலும் சிறப்புப் பெறுகின்றது. ஈழத்திலே கந்தபுராண கலாசாரம் வளர்ச்சிபெற இவ்வாலயத்திலே காலங்காலமாக நிகழ்ந்து வரும் கந்தபுராணபடனம் பெருந்துணை புரிந்துள்ளது. படிப்படியாக வளர்ச்சி பெற்று வரும் இவ்வாலயத்தில் அண்மையில் நடைபெற்ற திருப்பணிகளால் கோயில் புதுப் பொலிவு பெற்று வழிபாட்டிற்கென சிறந்து விளங்குகின்றது. திருப்பணிகளைத் தொடர்ந்து இவ்வாலயத்தின் புனராவர்த்தன மகாகும்பாபிஷேகம் சுக்கில வருடம் தைத்திங்கள் 18ஆம் நாள் (31-1-1990) புதன்கிழமை நிறைவேறி, தொடர்ந்து நாற்பத்தைந்து நாட்கள் மண்டலாபிஷேகம் நடைபெற்றுவருகின்றது. இன்று (16-3-1990) மண்டலாபிஷேக பூர்த்தியை முன்னிட்டு நவோத்ர சஹஸ்ர சங்காபிஷேகம் எம்பெருமானுக்கு இனிதே நடைபெறுகின்றது.

இச்கோயிலில் அடுத்துநிகழ வேண்டிய திருப்பணி கோபுரமாகும். இவ்வூர் மக்களின் ஆதரவுடன் அதற்கான பூர்வாங்க வேலைகளில் ஆலயத் திருப்பணி சபையினர் ஈடுபட்டுள்ளமை பாராட்டுக்குரியதாகும். 'கோபுர தரிசனம் கோடி புண்ணியம்' என்ற வாக்கிற்கேற்ப இக்கைங்காரியம் இங்கு நிறைவேறவுள்ளது. சூக்கும லிங்க தரிசனத்திற்கான திருப்பணிகள் நிறைவேறி தூலலிங்க தரிசனத்திற்கான திருப்பணி வேலைகள் நடைபெறுகின்றன. கோபுர அமைப்பினால் ஆலயம் பூரண பொலிவுபெற்றுத்திகழவுள்ளது.

### ஆலயவரலாறு

இவ்வாலய முருகன் மீது அன்பர்கள் பலர் பிரபந்தங்கள் பாடிப் பரவியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. திக்கரை முருகனது பூசையிலும் வழிபாட்டிலும் ஆழ்ந்து ஈடுபட்ட காரைநகர் கார்த்திகேயப் புலவர் (1819-1898) முருகனைப் பாட்டுடைத் தலைவருக்கொண்டு திக்கையந்தாதி (1864) என்ற பிரபந்தத்தை ஆக்கியுள்ளார். முருகப்பெருமான் புகழ்பாடும் மற்றுமொரு பிரபந்தம் 'திக்கைநாயகர் மும்மணிமாலை' ஆகும். இம்மரபைஅடியொற்றியாழ்ப்பாணம், இணுவில் சவிமாமணிபிரம்மஸ்ரீ ந. வீரமணி ஐயர் அவர்கள் 1953 ல் '' திக்கரை முருகன் அந்தாதிக் கீர்த்தனைகள் '' என்ற தலைப்பில் நூறு பாடல்களி பாடிப்பரவியுள்ளார். அவரது இப்பாடல்கள் இவ்வாலயகும்பாபிஷேகத்தையொட்டி வெளிவரவுள்ள சிறப்புமலரில் இடம்பெறுகின்றமை குறிப்பிடத்தக்கது.

ஆலயவழிபாட்டுக்கு வழி வகுக்கும் கும்பாபிஷேகத்தின் பயனை நாம் முழுமையாகப் பெறத்தக்க வகையில் எம்பெருமானுக்குரிய நித்திய நைமித்தியங்கள் ஒழுங்காக நடைபெறச் செய்வதும் மிகவும் இன்றியமையாததாகும். ★

**கலாநிதி ப. கோபாலகிருஷ்ணன்**

---

ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி
ஜகத்குரு ஸ்ரீ சங்கராசார்ய ஸ்வாமிகள்
ஸ்ரீ மடம் ஸம்ஸ்தானம்
அவர்களின்

## ஆசிச் செய்தி

ஸ்ரீ ஆதிசங்கர பகவதபாதாள் நிறுவிய ஆறு மதங்களுள் ஒன்றாகிய கௌமாரம் முருகனைப் பற்றியது ஸ்ரீலங்காவின் ஒரு பகுதியாகிய முருகனது ஸான்னித்தியம் நிரம்பிய பல தலங்களைக் கொண்ட பகுதி. இவைகளுள் ஒன்றாக விளங்கும் காரைநகர் திக்கரை ஸ்ரீ முருகமூர்த்தி திருக்கோவிலுக்கு ஆலயப் பராமரிப்பால் மிகமிகப் புண்ணியமான பணியாக விளங்கும் புனராவர்த்தன கும்பாபிஷேகம் செய்வித்து மலர் வெளியிடப்படுவது, குறித்து மகிழ்கிறோம்.

இந்து வாழ்க்கை முறைக்கு அஸ்திவாரமாக அமையும் இறைவழிபாடு, ஆலயம், அதன் பராமரிப்பு முதலிய பல விஷயங்களையும் விளக்குவதாக மலர் அமைந்து விளங்கவும் விழா நிர்விக்னமாக நடந்தேறவும் ஸ்ரீமுருகன் அருள் கிடைக்க ஆசீர்வதிக்கிறோம்.

---

## திக்கரை முருக மூர்த்தி கோவில்

முகாமையாளர்
திரு. க. நடராசா
அவர்களின்

## ஆசிச் செய்தி

தர்ம காரியங்களில் மிக உயர்ந்ததாகப் போற்றுப் படுவது ஆலயத்திருப்பணியாகும். 1974 ஆம் ஆண்டு நடந்த மகாகும்பாபிஷேகத்தின் பின் 1990 - 01 - 31 இல் மகாகும்பாபிஷேகம் முருகப்பெருமானின் திருவருளால் இனிதே நிறைவேறியுள்ளது.

இக்காலப் பகுதியில் மகாமண்டபம், வசந்த மண்டபம், உள்வீதி கொட்டகை, மணிக்கூட்டுக் கோபுரம், வைரவர், கொடித்தம்பம், ஆறுமுகசுவாமி கோயில், முகப்புக் கொட்டகை, முதலிய திருப்பணி வேலைகள் நடந்து முடிந்துள்ளன. நெருக்கடியான இக்காலக்கட்டத்திலும் இத்திருப்பணிகளுக்கும் மகாகும்பாபிஷேகத்திற்கும் உதவிய சகலருக்கும் முருகப் பெருமானின் திருவருள் கிடைப்பதாக.

இன்னமும் நிறைவு பெற வேண்டிய திருப்பணி வேலைகள் பல உள. திருக்கோபுரம் அமைப்பதற்கான ஆயுத்தங்கள் ஏற்கனவே தொடங்கியுள்ளன. ஆலயத் திருப்பணி வேலைகளில் ஈடுபட்ட சகல ஸ்தபதிகளுக்கும் எமது நன்றிகள். இத்திருக்கோபுர நிதிக்கும் மற்றும் திருப்பணிகளுக்கும் முருகப் பெருமானுடைய அடியார்கள் தொடர்ந்தும் தம் ஆதரவை வழங்குவார்கள் என்பது எமது அசையாத நம்பிக்கை.

இம்மகா கும்பாபிஷேகத்தையொட்டி வெளிவரவிருக்கும் மலர் எங்கள், குல தெய்வம் முருகப்பெருமானின் பெருமையையும் அற்புதங்களையும் எடுத்துக் கூறி, அப்பெருமானை மனமுருக வழிபடச் செய்யும் ஒரு வழிகாட்டியாக அமையவிருப்பது மகிழ்ச்சிக்குரியது.

இம்மலர்க் குழுவினர்க்கு எமது மனமார்ந்த நன்றிகள்

வேல் எடுத்து வினைதீர்க்கும்
மால் மருகா...! வேல் முருகா...!
கால் பிடித்தோம் காத்தருளவா

அன்னராஜா ஸ்ரோர்ஸ்
158, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

ஆறுமுகம் இருக்கும் வரை
அச்சம் நமக்கேது

செல்லப்பா அன்ட் கொம்பெனி
4/1, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

## மண்டலாபிஷேக நிகழ்ச்சிகள்

பிரதம குரு பிரதிஷ்டா வித்வஜோதி கிரியாசகரம் சிவஸ்ரீ. இ. சுப்பிரமணியக் குருக்கள் அவர்கள் தலைமையில் சங்காபிஷேகம் காலை 8. 00 மணி தொடக்கம் நடைபெறும்.

திரு. V. K. கானமூர்த்தி, பஞ்சமூர்த்தி குழுவினர் N. சிதம்பரநாதன் குழுவினர் மேளக்கச்சேரியும்

இரவு ''கந்தன் நான்முகனைச் சிறைவைத்தது'' என்னும் பொருள் பற்றி கம்பன் கழக அமைப்பாளர் திருமிகு இ. ஜெயராஜ் தலைமையில் பட்டி மன்றமும்

நல்லூர் ஸ்ரீதேவி வில்லிசைக் குழுவினரின் வில்லிசையும் இடம் பெறும்.

---

காரைநகர்

## திக்கரை முருக மூர்த்தி கோவில்

திருப்பணிச் சபைத் தலைவர்
திரு ச.வி.முருகேசு
அவர்களின்

## ஆசிச் செய்தி

நிறைவு பெருதிருந்த திக்கரை முருகன் திருப்பணி வேலைகளைப் பூர்த்தி யாக்கி மகா கும்பாபிஷேகத்தை நடத்த வேண்டும் என்ற தெய்வீக நோக்கோடு உருவாக்கப்பட்ட திக்கரை முருகன் திருப்பணிச் சபை அப்பணிகள் இனிது நிறைவேறியதையிட்டு பூரிப்படைகிறோம்.

இச் சபை முருகனடியார்களின் பூரண ஒத்துழைப்புடன் பல திருப்பணி வேலைகளை நிறைவு செய்துள்ளது முருகப்பெருமான் திருவருளால் 31 - 01 - 90 இல் மகா கும்பாபிஷேகம் மிகச் சிறப்புடன் நடைபெற்றது.

கும்பாபிஷேகத்தைத் தொடர்ந்து நிகழ்வது மண்டலாபிஷேகம், கும்பாபிஷேகம் செய்த பலனை அடையும் பொருட்டு செய்யப்படுவது மண்டலாபிஷேக விழாவாகும்.

மண்டலாபிஷேகம் சிறப்புடன் நடைபெற முருகன் திருவருள் பாலித்துள்ளார்.

இந் நிறைவு விழாவை யொட்டி கும்பாபிஷேக சிறப்பு மலர் ஒன்று வெளியிடப்படுவது மிகப்பொருத்தமானதே.

எல்லாப் பணிகளும் இனிது நிறைவேறி முருகன் அடியார்கள் இன்புற்றிருக்க திருவருள் கிட்டுமாக.

## திக்கரை முருகன் இராஜகோபுர திருப்பணி வேலைகள்

புதுப் பொலிவுடன் காட்சியளிக்கும் திக்கரை முருகன் திருவாலயத்திற்கு இராஜகோபுரம் அமைக்க வேண்டிய அவசியத்தை முருகனடியார்கள் நீண்ட காலமாக உணர்ந்து வந்தனர். முருகப் பெருமான் திருவருளால் இத்தெய்வீக கைங்கரியம் கைகூடும் அறிகுறி ஏற்பட்டுள்ளது. இராஜகோபுர சிறப்பு மலர் ஒன்று கா. கி. இந்து வாலிபர் சங்கத்தினால் 29- 6- 84 ல் வெளியிடப்பட்டது.

இராஜ கோபுரம் அமைப்பதற்கான வரைபடம் ஒன்று தென் இந்திய ஸ்தபதி திரு. வி. நாகலிங்கம் அவர்களினால் வரையப்பட்டு முருகனடியார்களின் பார்வைக்கு வைக்கப்பட்டது.

இராஜ கோபுரம் அமைக்கும் திருப்பணியில் ஈடுபட பல இளைஞர்கள் முன்வந்துள்ளனர்.

திருப்பணிச் சபை பொருளாளரும், கோபுர திருப்பணியில் மிக்க ஆர்வம் கொண்டவருமாகிய திரு. பே. பாலசுப்பிரமணியம் வெளிநாடுகளில் வதியும் எமது இளைஞர்களிடம் நிதி திரட்டும் பணியில் தீவிரமாக ஈடுபட்டுள்ளார்.

கோபுர திருப்பணிக்கான கற்கள் கொண்டு வரும் பணி ஆரம்பமாகியுள்ளன.

இத்திருப்பணிகளை விரைவில் ஆரம்பித்து துரிதமாக பூர்த்தியாக்க வேண்டுமென்ற உணர்வு முருகன் அடியார்கள் உள்ளத்தில் பரந்து காணப்படுகிறது.

கோபுர திருப்பணிக்கு வாரி வழங்குமாறு முருகன் அடியார்களை வேண்டுகின்றோம்.

ஐ. தி. சம்பந்தன்
பொதுச் செயலாளர்
இந்து வாலிபர் சங்கம்
காரைநகர் – கிழக்கு

---

குடமுழுக்கு விழா மலர்

## வெளியீட்டு விழா

திருப்பணிச் சபை தலைவர் திரு. ச. வி. முருகேசு அவர்கள் தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் நல்லை ஆதினம் வாழ்த்துரையும், பலகலைப் புலவர் க. இ. குலரத்தினம் அவர்கள் வெளியீட்டுரையும் சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி திரு. சிவ மகாலிங்கம் ஆகியோர் பாராட்டு உரையும் வழங்கவுள்ளனர்.

திரு. ஐ. தி சம்பந்தன் அறிமுகவுரை நிகழ்த்துவார்.

இவ் விழாவில் கலாநிதி ப. கோபாலகிருஷ்ணன், பிரம்மஸ்ரீ ந. வீரமணி ஐயர் ஆகியோர் பாராட்டிக் கௌரவிக்கப்படவுள்ளனர்.

வண்ண மயிலேறி வந்துதவ வேண்டும்
வள்ளி மணவாளனே உந்தனடியோர்க்கு

வீ. எம். பரமநாதன் அன்ட் சன்ஸ்,
47, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

கோபுர தரிசனம்
கோடி புண்ணியம்

திக்கரை முருகனுக்கு இராஜகோபுரம் அமைய வேண்டியது அவசியம் அது நிறைவேற முருகன் துணை நிற்பாராக!!

சித்ரி ஏஜென்சி
இல. 158, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
தொலை பேசி: 24817

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விரைவில் வெளிவருகிறது!

★ ஞானக்கதிர் ★

பங்குனித் திங்கள் இதழ்!

அம்பாள் அடியார்களுக்கு அருவிருந்து!!

ஞானக்கதிர்

அன்பு-அறநெறி- ஆன்மீகம்



★ அம்பாளின் தோற்றம்
★ அம்பாள் வழிபாட்டு முறைகள்
★ அம்பாளுக்குரிய விரத நாட்கள்
★ அம்பாளுக்குரிய நிவேதனப் பொருட்கள், புஷ்பங்கள், நிறங்கள், இலைகள், இரத்தினங்கள் பற்றிய விளக்கம்.
★ அம்பாளின் ஈழத்துத் திருத்தலங்களான;

- □ இணுவில் சிவகாமியம்பாள் ஆலயம்
- □ பன்றித்தலைச்சி அம்பாள் ஆலயம்
- □ சங்கரத்தை பத்திரகாளி அம்பாள் ஆலயம்
- □ திருக்கோணமலை பத்திரகாளி அம்பாள் ஆலயம்

— ஆகியவற்றின் அற்புதங்களும், வரலாறும்

★ பகவான் சாயிபாபா வழங்கிய தினசரிப் பிரார்த்தனை
★ காட்டுச் சாமியாரின் ஸ்பரிச தீட்சை
★ இன்னும் பல ..............!

பிரதி விலை ரூபா 5/- மட்டுமே

□ அம்பாள் அடியார்களே!
உங்கள் பிரதிகளுக்கு முந்துங்கள்!!

● பிரதிகளை தவறாது பெற உதயன் முகவர்களிடம் முன் கூட்டியே பதிவு செய்து கொள்ளுங்கள்.

[சி-3422]


# பலஸ்தீனப் பிரச்சினைக்குத் தீர்வு காணும் அமெ. முயற்சி பின்னடைவு

## தொழிற்கட்சி வெளியேற்றத்தால் இஸ்ரவேலிய அரசு கவிழும் ஆபத்து

வாஷிங்டன், மார்ச் 15

இஸ்ரவேலிய அமைச்சரவையில் ஏற்பட்டுள்ள பிளவு காரணமாக பலஸ்தீனியப் பிரச்சினைக்குதீர்வு காணுவதற்கு அமெரிக்காஎடுத்துவந்தமுயற்சிகளில் பலத்த பின்னடைவு ஏற்பட்டுள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

இஸ்ரவேல்அரசுடன் பலஸ்தீனியர்பிரதிநிதிகள் நேரடிப் பேச்சுக்களை நடத்தும் ஒரு திட்டத்தைஅமெரிக்க அரசு இஸ்ரவேலிடம் முன் வைத்தது.

இஸ்ரவேலில் கூட்டுஅமைச்சரவை உள்ளது. லிக்குவிட் கட்சித் தலைவரான திரு. யிற்ஸாக் ஷாமீர் பிரதமராக உள்ளார்.

அமெரிக்க யோசனையை ஏற்க லிக்குவிட் தயாரக இல்லை.

பலஸ்தீனிய விடுதலை முன்னணியின் உத்தியோக பிரதிநிதிகளுடன் பேச்சுக்களை நடத்தத் தயாரில்லை என்று லிக்குவிட் கட்சி கூறுகிறது.

கூட்டு அமைச்சரவையில் அங்கம் வகிக்கும் தொழிற்கட்சியோ பேச்சுக்களை செய்ரோவில் நடத்த வேண்டும் என்றும் அமெரிக்க யோசனையை ஏற்க வேண்டும் என்றும் தெரிவித்தது

இக்கருத்து வேறுபாடுகள் தீவிரமடைந்தன. இதனைத் தொடர்ந்து பிரதமர் ஷாமிர் தொழிற்கட்சித் தலைவர் ஷிமோன்பெரெஸை அமைச்சரவையில் இருந்து வெளியேற்றினார். அதனைத் தொடர்ந்து தொழிற்கட்சியின் ஏனைய அமைச்சர்கள் அமைச்சரவையில் இருந்து ராஜினாமாச் செய்தனர்.

இந்த நிலையில் லிக்குவிட் கட்சி தனது அரசுக்குப் பெரும்பான்மை இருப்பதை நிரூபிக்க நாடாளு மன்றத்தில்நம்பிக்கை வாக்கெடுப்பை நடத்த வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

இதில் லிக்குவிட் கட்சி தோற்றால் இஸ்ரவேல் நடாளுமன்றத்துக்கு புதிய தேர்தல் நடத்தப்பட்டாக வேண்டும்.

உதிரிக் கட்சிகளின் ஆதரவுடன் லிக்குவிட் கட்சி தனது பெரும்பான்மையை நிரூபிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (எ)

## ஒரிஸ்ஸா அகதிகளுக்கு ரூ. 10 லட்சம் ஒதுக்கீடு

புவனேஸ்வர், மார்ச் 15

ஒரிஸ்ஸாவில் தங்கியிருக்கும் இலங்கைத் தமிழ் அகதிகளின் பராமரிப்பிற்காக புதுடில்லி அரசு முதற் கட்டமாக பத்துலட்சம் ரூபாவை ஒதுக்கியுள்ளது.

இதனிடையில் இலங்கைத் தமிழ் அகதிகள் தங்க வைக்கப்பட்டுள்ள கோராபுட் மாவட்டத்தில் மல்கங்கிரிபிரிவில் நக்ஸலைற் தீவிரவாதிகளின் நடவடிக்கைகள் தீவிரமாக இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது

நக்ஸலைட்டுகளின் தீவிரவாத நடவடிக்கைகளைக்கட்டுப்படுத்துவதற்காக கோராபுட் மாவட்டத்தில் பல இடங்களில் காவல் நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

அவற்றில் தமிழ்நாட்டைச் சேர்ந்த விசேட ஆயுதப் பொலீஸார் பணி புரிகின்றனர்.

சக்திக்குடா என்னும் பகுதியில் தமிழ் அகதிகள் வைக்கப்பட்டுள்ளனர். சுதந்திரமாக வெளியே திரிந்து நடமாட அகதிகளுக்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

இரண்டாம்கட்டமாக3,676 இலங்கை அகதிகளுக்கு மேலும் தஞ்சமளிக்கஒரிஸ்ஸா முதலமைச்சர் பிஜுநட்நாய்ச் இணங்கியிருப்பதாகபுவனேஸ்வர் செய்தியொன்று தெரிவிக்கின்றது. [ஒ-எ]

## காஷ்மீர் பிரச்சினை; லோகசபை தீர்மானம்

புதுடில்லி மார்ச் 15

காஷ்மீர் பிரச்சினையில் மக்கள் கருத்து வேறுபாடுகளை மறந்து இந்தியாவின் ஒற்றுமையையும் ஒருமைப்பாட்டையும் பாதுகாக்கத் தயாராக இருக்கவேண்டும் என்று கோரும் தீர்மானம் ஒன்று இந்திய லோகசபைக் கூட்டத்தில் ஏகமனதாக நேற்றுநிறைவேற்றப்பட்டது. காஷ்மீர் பிரச்சினை குறித்து லோகசபையில் சிறப்பு விவாதம் ஒன்று நேற்று நடைபெற்றது.

## தமிழரின் மாயை அகல்கிறது; புதுவை வெற்றி பற்றி கலைஞர்

பாண்டிச்சேரியில் தி. மு. க. தலைமையிலான கூட்டணி அரசு அமைக்கப்பட்டுள்ளது தெரிந்ததே.

அதனைத் தொடர்ந்து புதுவை வாக்காளர்களுக்கு நன்றி தெரிவிக்கும் கூட்டம் ஒன்று அண்ணாதிடலில் தி. மு. க. வினால் நடத்தப்பட்டது.

அதில் கலந்து கொண்டு தமிழ் நாடு முதலமைச்சர் கலைஞர் கருணாநிதி பேசினார்.

அவர் சொன்னதாவது; புதுவையில் தி. மு. க. கூட்டணிக்கு 57 சதவீத வாக்குகளும் இந்திரா காங்கிரஸ்-அ. தி. மு. க. கூட்டணிக்கு 43 சதவீத வாக்குகளும் கிடைத்தன.

நம் அணிக்கு 16 இடங்களும் அவர்கள் அணிக்கு 14 இடங்களும் கிடைத்தன. இரண்டு இடம் வித்தியாசத்தை வைத்து எந்த நேரத்திலும் ஆட்சியைக் கவிழ்க்கலாம் என்று மனப்பால் குடிப்பதை நான் அறிவேன்.

ஏற்கனவே நான் அவர்களை அறிந்தவன். எனவே எப்படி சமாளிப்பது என்பது எனக்குப் புரியும்.

கவிழ்த்துக் காட்டுகிறேன் என்பது அடுத்தவன் வீட்டில் குழந்தை பிறந்தால் அந்தக் குழந்தை எத்தனை நாள் உயிருடனிருக்கப் போகிறது, பார்க்கிறேன் என்று பக்கத்து வீட்டுப் பெண் கூறுவதைப் போல இருக்கிறது.

மாயை அகல்கிறது என்ற கட்டுரையைப் படித்தேன். மாயை திடீர் என்று விலகி விடாது. கொஞ்சம் கொஞ்சமாக விலகும்.

திடீர் என்று மக்களுக்கு தெளிவு ஏற்பட்டு விடாது. தாயின் மடியில் உள்ள குழந்தைக்கு நேராக கிலுகிலுப்பைக் காரன் கிலுகிலுப்பையை ஆட்டினால் அந்த குழந்தை தாயை மறந்து கிலுகிலுப்பைக்காரன் மீது தாவும். அவன் கிலுகிலுப்பையை ஆட்ட சிறிது நேரம் சிரித்துக் கொண்டிருக்கும்.

அந்தக் குழந்தைக்கு பசி ஏற்பட்டால் அந்த குழந்தை தாயின் மடிமீது தாவும். கிலுகிலுப்பை ஆட்டம் முடிந்தது. குழந்தை தாவுகிறது. மாயை மறைந்தது.

இப்படி திரு. கருணாநிதி சொன்னார். (எ)

## சூடானில் நடக்கும்கிளர்ச்சி; தீர்வுகாண எகிப்து முயற்சி!

கார்ட்டூம் மார்ச் 15

சூடானில் இடம்பெற்று வரும் 6 ஆண்டு கால சிவில் யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வரும் முயற்சியின் ஒருகட்டமாக கென்யா ஜனாதிபதி டானியல் மொய்க்கு எகிப்து ஜனாதிபதிஹோஸ்னிமுபாறக் கடிதம் ஒன்றை அனுப்பி வைத்தார். சூடான் அரசும் போராளிகளும் முதலில் யுத்த நிறுத்தம் ஒன்றை அனுஷ்டிக்க வேண்டும் என்று ஜனாதிபதி முபராக் தனது கடிதத்தில் கூறியிருக்கிறார். (எ)


கலை, வர்த்தகக் கல்லூரி

C. C. A

மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.

[வெலிங்டன் சந்தி அருகே]

A/L 90

மீட்டல் வகுப்புகள்

| | | |
|---|---|---|
| பொருளியல் | — | வரதராஜன் |
| வர்த்தகம் | — | ரட்ணம் |
| கணக்கியல் | — | ஸ்ரீ |
| அளவையியல் | — | S. S. மனோகரன் |
| இந்துநாகரீகம் | — | கிருஷ்ணா |
| தமிழ் | — | குழந்தை |

ஆரம்பம்:

சனி, ஞாயிறு வகுப்புகள்

17-3-90 சனி 10.00 a.m.

★ பகல் நேர வகுப்புகள் ★

19-3-90 திங்கள் 8.00 a.m.

[சி-4001]



முக்கிய அறிவித்தல்

O/L (March)

மாணவர்களுக்கான

இலவச பயிற்சிப் பரீட்சை

மேற்படி பரீட்சை இம் மாதம் 17, 18 [சனி, ஞாயிறு] பி.ப. 1.00மணிக்கு ஆரம்பமாகும்.

நேர அட்டவணை

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | கணிதம் II | [17-03-1990] | பி.ப. 1.00—4.00 |
| | கணிதம் I | [17-03-1990] | பி.ப. 4.00—5.00 |
| 2. | விஞ்ஞானம் II | [18-03-1990] | பி.ப. 1.00—4.00 |
| | விஞ்ஞானம் I | [18-03-1990] | பி. ப. 4.00—5.00 |

பரீட்சை மண்டபம்

★ சுட்டிலக்கம் 5000 தொடக்கம் 5350 வரை
Hall No I, II, III.

விக்னா டியூசன் சென்ரர்
52, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.

★ சுட்டிலக்கம் 5350 தொடக்கம் 5650
Hall No I, II, III, IV

புதிய உயர்கலைக் கல்லூரி
ஆரிய குளம் — யாழ்ப்பாணம்.

★ வெளிமாவட்டத்து பாடசாலைகளுக்கு வினாத் தாள்கள் யாவும் அனுப்பப்பட்டுள்ளன. எம்மிடம் பதிவு செய்த ஏனைய பாடசாலைகளும் நிறுவனங்களும் 16 - 03 - 1990 அன்று வினாத் தாள்களையும் விடைத்தாள்களையும் பெற்றுக் கொள்ளவும்.

முக்கிய குறிப்பு: பரீட்சைக்கான விடைத்தாள்கள் யாவும் இலவசமாக வழங்கப்படும். நிறுவனத்தால்வழங்கப்பட்ட அனுமதிப் பத்திரமும் உங்கள் அடையாள அட்டைகளையும் மற்றும் பரீட்சைக்குத் தேவையானவற்றையும் கொண்டு வரவும்.

விக்னா டியூசன் சென்ரர்
52, ஸ்ரான்லி றோட்,
யாழ்ப்பாணம்.

FREE EXAM UNIT

[சி-4016]


## ★ பிறந்தநாள் வாழ்த்து ★

### சிவகுமாரன் துஷத்தா

பருத்தித்துறை ம்பளையைச் சேர்ந்த சிவகுமாரன் துஷத்தா 16 - 03 - 1990 வெள்ளிக்கிழமை தனது 5ஆவது பிறந்தநாளை அவரது ''உமாபதி'' இல்லத்தில் கொண்டாடுகின்றார்.

இவரை லண்டனில் வசிக்கும் அப்பா, அம்மா, தங்கை, அப்பப்பா (R. S. இராமநாதன் முன்னாள் திடீர் மரண விசாரணை அதிகாரி) அப்பம்மா (பாக்கியம் இராமநாதன்) ஆகியோர் நெல்லண்டப் பத்திரகாளி அம்மன் திருவருள் பெற்று நூறாண்டு காலம் வாழ வாழ்த்துகின்றார்கள்.

[12030]

## இரண்டாவது ஆண்டு நினைவஞ்சலி

(16. 03. 1990)



தோழர்

### அமரர் சி. விஜயானந்தன்

(தொழிற் சங்கவாதியும், இலங்கைக் கொம்யூனிஸ்ற் கட்சிப் பிரமுகரும்)

எங்கள் அன்புத் தெய்வமே! உங்களை எங்களிடம் இருந்து பிரிக்கப்பட்டு ஆண்டுகள் இரண்டு உருண்டோடி விட்டன! உங்கள் இழப்பால் ஏற்பட்ட வெளி இன்றும் சூனியமாகவே இருக்கின்றது. அன்பால், பண்பால், அறிவுரையால், எங்களை வழி நடத்திச் சென்ற எங்கள் அன்புக்குரியவரே! உங்களைத் தோழர்கள் மறக்கலாம், தொண்டர்கள் மறக்கலாம், ஆண்டுகள் எத்தனை சென்றாலும் உங்கள் நினைவு என்றும் பசுமையாகவே எங்கள் மனதில் நிலைத்திருக்கும் உங்கள் ஆன்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

அன்பு மனைவி, அருமைப் பிள்ளைகள்.

கந்தரோடை,
சுன்னாகம்.

(சி-3447)

## 3வது ஆண்டு நினைவஞ்சலி



மண்ணுலகில்:
23 - 10 - 1969

விண்ணுலகில்:
16 - 03 - 1987

### நடராஜன் இராஜேந்திரகுமார்

(ரஞ்சன்)

அருமை மகனே 'ரஞ்சா'
அன்பால் எம்மைக் கவர்ந்திடுவீர்!
அன்பு நிறைந்த எம் செல்வமே!
உன்பால் இன்று நாம் வாடச்
சொல்லாய் ஆகிப் பிரிந்திட்டீர்!
உன் போல் இனியர் யார் உளர்!
உற்ற துணையே! எம் உயர்ந்த உறவே!
உம் பிரிவினை எப்படித் தாங்குவோம்!
உம் ஆத்ம சாந்திக்காக
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்!

துயருறும்:

ஐயா, அம்மா, அண்ணா, சகோதரிகள், அத்தான்மார், அக்கா, மருமக்கள், மாமாமார், உற்றார், உறவினர்கள்.

சாயுடை,
கீரிமலை றோட்,
மாவிட்டபுரம்.

[2776]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊர்காவற்றுறை, நெடுந்தீவு, வேலணை, சாவகச்சேரி
# பயிலுநர் ஆசிரியர் இறுதிப் பட்டியல்

யாழ்ப்பாணம் மார்ச் 16
ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் தெரிவு செய்யப்பட்ட பயிலுநர் ஆசிரியர் விவரம் வருமாறு:

**ஆரம்பகல்வி**
சி. மேனகா ஊர்காவற்றுறை, வே. பாரதா. எழுவைதீவு, தி. சிந்தனைச் செல்வி காரைநகர், து. இன்பவதனி காரைநகர், து. வாசுகி ஊர்காவற்றுறை, ஐ. புஸ்பராணி காரைநகர், பா. சறோஜினி ஊர்காவற்றுறை. இ. ராஜேஸ்வரி காரைநகர்.

**கிறிஸ்தவம் றோ. க**
அ. அன்ரெலா ஜெரின் ஊர்காவற்றுறை.

**தமிழ்**
செல்வி பெ. இராஜேந்திரம் ஊர்காவற்றுறை

**கணிதம்**
செல்வி ஜே. ஆர். ராஜேந்திரம் ஊர்காவற்றுறை

**விஞ்ஞானம்**
திருமதி ப. பராசத்தி காரைநகர் மேற்கு.

**ஆங்கிலம்**
செ. ஹேமா ஊர்காவற்றுறை, பி. அருட்செல்வி டொரின் சாந்தகுமாரி ஊர்காவற்றுறை.

**சமூகக்கல்வி**
செல்வி அ. கணபதிப்பிள்ளை காரைநகர், சி. பிரபாகரன் காரைநகர்.

**சித்திரம்**
சி. தனேஸ்வரி ஊர்காவற்றுறை. மு. ஜக்குலின்கன்னிகா ஊர்காவற்றுறை.

**சங்கீதம்**
நா. விமலேஸ்வரி ஊர்காவற்றுறை கு. கலைச்செல்வி ஊர்காவற்றுறை

**நடனம்**
வி. ஞானாம்பிகை காரைநகர்

**விவசாயம்**
இ. ராஜினி ஊர்காவற்றுறை

**வர்த்தகம்**
செ. செல்வராணி காரைநகர்.

## நெடுந்தீவு

★ நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் பிரிவில் தெரிவானவர் விவரம் வருமாறு:

**ஆரம்பகல்வி**
ஆ. கேதீஸ்வரி நெடுந்தீவு, பி. ஜோ. சாந்தினி நெடுந்தீவு, த. தவமணி நெடுந்தீவு, சி.ப. பரமலிங்கம் நெடுந்தீவு, அ. ஜெயவதி நெடுந்தீவு

**கணிதம்**
ச. கோகுலவரதன் நெடுந்தீவு

**ஆங்கிலம்**
சு. செந்தில்நாயகி நெடுந்தீவு.

**சித்திரம்**
சு. சந்தானலட்சுமி நெடுந்தீவு.

## வேலணை

★ வேலணை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் தெரிவு செய்யப்பட்டோர்விவரம் வருமாறு:

**ஆரம்ப ஆசிரியர்:**
பே. கமலாவதி வேலணை தெற்கு, ஐ. சிவஞானி வேலணை கிழக்கு, ச. வசந்தகுமாரி வேலணை மேற்கு, ஐ. பவானி வேலணை, வே. ஆன்சுத்தறின் அன்ரலா மண்டைதீவு, இ. பத்மராணி புங்குடுதீவு, இ. அருந்தவராணி வேலணை, க. பவானி புங்குடுதீவு, ச. பாமா வேலணை, ஐ. வனஜமலர் வேலணை, ம. லலிதா புங்குடுதீவு, க. பரமேஸ்வரி வேலணை, ஐ. சத்தியபாமா புங்குடுதீவு க. சாந்தகுணேஸ்வரி வேலணை, து. விஜயகுமாரி வேலணை ம. ஜெயந்தி வேலணை, பொ. வசந்தா வேலணை, நா. மா. இராஜேஸ்வரி மண்டைதீவு, க. விமலேஸ்வரி வேலணை, பி. சுகந்தினி அல்லைப்பிட்டி, கை. அனுசுயா புங்குடுதீவு கு. திலகவதி மண்டைதீவு, ச. பவானி வேலணை, சா. நந்தினி வேலணை, செல்வி.ச. வள்ளிநாயகி வேலணை, பே. சந்தானலட்சுமி வேலணை, க. சண்முகம்பிள்ளை, வேலணை, செல்வி செ. உதயா, வேலணை,

**கிறிஸ்தவம் றோ. க**
கிளமன்ரா அமலேஸ்வரி அல்லைப்பிட்டி, ஜோ. மேரி பியற்றீஸ் அனலைதீவு, செல்வி. தி. இருதயமலர் மண்டைதீவு

**கிறிஸ்தவம் றோ. க. இல்லாதது**
செ. எமிபெல் சுபாஷினி புங்குடுதீவு

**சிங்களம்**
க. பு. பெளவியா பீபி வேலணை

**தமிழ்**
த. மகாராணி புங்குடுதீவு, செ. செல்வாம்பிகை வேலணை, ந. நந்தினி நயினாதீவு, கோ. வசந்தமாலினி மண்டைதீவு

**கணிதம்**
இ. மதிவதனா வேலணை

**விஞ்ஞானம்**
ஐ. சி. பிரேம் ஜெயா புங்குடுதீவு, ப. மோகேந்திரன் நயினாதீவு, சி. இரஞ்சினி புங்குடுதீவு

**ஆங்கிலம்**
இ. இராஜேஸ்வரி வேலணை, இ. மதிசரன் வேலணை திருமதி. த. பவானிதேவி வேலணை, ந. லோகநாயகி வேலணை, து. இன்பமலர் வேலணை, கு. ஜே. விஜயரத்தினம் மண்டைதீவு

**சமூகக்கல்வி**
பா. புற்கலை புங்குடுதீவு, மா. மணிமாலா வேலணை, த. பாலேஸ்வரி வேலணை.

**சித்திரம்**
து. பத்மபூஷணகுமாரி புங்குடுதீவு, உ. திரிபுராம்பாள் நயினாதீவு, ஐ. செல்வராணி புங்குடுதீவு.

**சங்கீதம்**
து. இராஜேஸ்வரி புங்குடுதீவு, சா. வாசுகி வேலணை, செ. மங்களேஸ்வரராணி வேலணை, சு. மோகனராணி புங்குடுதீவு, க. வசந்தமாலா புங்குடுதீவு, ந. முத்துராணி மண்டைதீவு.

**நடனம்**
ச. நாளாயினி வேலணை, அ. லூசியா கிறேஸ் புங்குடுதீவு, ச. ரேவதி புங்குடுதீவு.

**விவசாயம்**
இ. இராஜேஸ்வரன் வேலணை, சு. வசந்தராணி நயினாதீவு

**மனைப்பொருளியல்**
ந. உமாதேவி வேலணை, த. சாரதாமணி புங்குடுதீவு.

**வர்த்தகம்**
ச. ஞானத்திதி வேலணை' க. ஜீவசீலன் நயினாதீவு, ச. கலாரஜனி வேலணை.

**சுருக்கெழுத்து**
பே. சரஸ்வதி வேலணை.

## சாவகச்சேரி

சாவகச்சேரி உதவி அரசாங்க அதிபர் பிரிவில் பயிலுநர் ஆசிரியர்களாகத் தெரிவு செய்யப்பட்டோர் விவரம்,

**ஆரம்பக்கல்வி**
திருமதி இ. கலாசோதி சாவகச்சேரி, ப.நகுலேஸ்வரி சாவகச்சேரி, சு. பரமேஸ்வரி கல்வயல், அ. மனோரஞ்சிதன் மட்டு தெற்கு, கா. கலாசோதி சரசாலை தெற்கு, கு. இராசமணி கெற்பேலி, சி. திலகவதி வரணி, வ.சரஸ்வதி உசன், பொ. கிருபாலினி மீசாலை வடக்கு, சு. சாந்தரூபிஇயற்றாலை, மு.சோதீஸ்வரி கைதடி, சி. மல்லிகா சாவகச்சேரி, கா. பாமினி கல்வயல், சி. செல்லம்மா கொடிகாமம், சி. ந. பத்மினிதேவி கைதடி, க. சந்திரவதனா கைதடி, சே. இரஞ்சிததேவி, வரணி, செல்வி உ. கணபதிப்பிள்ளை மீசாலை, ச. தனலட்சுமி உசன், கா. சிவயோகம் சாவகச்சேரி, வ. பவலேஸ்வரி, சாவகச்சேரி, தேசநாதன் உதயகுமார் கொடிகாமம், செ. செல்வராசா வரணி, திருமதி சி. திலகவதி மந்துவில், ச. வி. சந்திரசேகரம் மீசாலை, சி. விஜயபாரதி கொடிகாமம், இ. நாகேந்திரன் இயற்றாலை, ஞா.சிவபாலன் சாவகச்சேரி, த. சந்திரலீலா சாவகச்சேரி, தா. பிரேமலதா மிருசுவில், சு.தர்மஞானேஸ்வரி வரணி, மு. சந்திராணி வரணி.

**விவசாயம்**
சு. கலாரெஞ்சினி சாவகச்சேரி, மு. லோகநாயகி சாவகச்சேரி,

**வர்த்தகம்**
செ அ. சிறிஸ்கரன் மந்துவில், யோ. அருந்தவம் மீசாலை வடக்கு

**மனைபொருளியல்**
திருமதி தே. பரமேஸ்வரன் சாவகச்சேரி.

**நெசவு**
அ புஷ்பஞானம் சரசாலை

**வாழ்க்கைத்திறன்**
பொ. இராசேந்திரா மட்டுவில்.

**சங்கீதம்**
திருமதி வே. செல்வராணி கச்சாய், க. செல்வமலர் கச்சாய், சி. நீலாம்பிகை வரணி, சி குலசிங்கம் மந்துவில், சி. ஞானாம்பிகை வரணி, சி. சிவகெங்கா மிருசுவில், த. தனலெட்சுமி மீசாலை.

**விஞ்ஞானம்**
தா. கணேசலிங்கம் மீசாலை, தி. கிருஸ்ணமூர்த்தி ஐயர் சாவகச்சேரி, க. சிவனேஸ்வரி மட்டுவில், க. அன்பரசி சரசாலை, சு. பாலகிருஸ்ணன் சங்கத்தானை, நா. மகேந்திரன் சங்கத்தானை.

**சமூகக்கல்வி**
சி. சந்திரதேவி மிருசுவில், க. கோமதி கைதடி, க. பத்மநிதி சாவகச்சேரி, வா. சிவஞானம் மீசாலை, க. அருந்தவம் சரசாலை, பொ. தங்கேஸ்வரி மீசாலை, பொ. விஜயலட்சுமி கொடிகாமம்.

**சிங்களம்**
திருமதி இ. ஜெகதேவி நுணாவில், ந. தமராதேவி நுணாவில்.

**தமிழ்**
சி.சிறிமாலா இயற்றாலை, ஐ. ஞானலட்சுமி கைதடி, க. மீலலோஜினி கொடிகாமம், க. புஸ்டராணி மட்டுவில், வி. வீரரமணி வரணி, க. வள்ளிநாயகி மீசாலை.

**நடனம்**
செல்வி ப. கிருஜா சாவகச்சேரி, வ. க. அற்புதராணி சாவகச்சேரி, ச. நிர்மலா மட்டுவில், அ. துஷிதா சாவகச்சேரி, இ. கெளரி சாவகச்சேரி, வி. விகிதா சாவகச்சேரி, லோ. சுவர்ணா சாவகச்சேரி, பொ. சாந்தி நுணாவில், ச. ராஜினி சாவகச்சேரி, திருமதி ஜெ. மிர்றாளினி சாவகச்சேரி, ச. கெளசலா கைதடி, ந. இரஞ்சினி வரணி.

**கணிதம்**
எஸ். உதயகுமாரி கொடிகாமம், வ. கமலேஸ்வரி சாவகச்சேரி, க. ஞானேஸ்வரி சாவகச்சேரி, நா. கமலேஸ்வரி கொடிகாமம், நா. குகநேசன் மீசாலை.

**ஆங்கிலம்**
கி. பாலசிறி சாவகச்சேரி வடக்கு, த. ஆனந்தவடிவேல் கொடிகாமம், இ. இராஜேஸ்வரிகொடிகாமம், வ. துரியகலை கைதடி நீ. து. மேரி சிவிஸ்ராமிருசுவில் அ. பிறேமாவதி சரசாலை ந. வசந்தா சாவகச்சேரி ந. ஜெயமலாமீசாலை.

**சைவசமயம்**
சி. தபோ ஆனந்திகொடிகாமம், தி. சுசித்ரா கொடிகாமம்.

**கிறிஸ்தவம் றோ.க**
கி. அனோஜா மிருசுவில்ச, அ. இ. பிரான்சிஸ் அம்மா கொடிகாமம்,

**கிறிஸ்தவம் றோ. க அல்லாதது**
அ.தேவமலர் கொடிகாமம்

**சுகாதாரமும், உடற்கல்வியும்**
க. முதலிக்குட்டி வரணி, ந. தேவகி கொடிகாமம், வ. வள்ளியம்மை வரணி.

**சித்திரம்**
கே. கந்தசாமி கொடிகாமம், செ. இ. மகேந்திரன் மீசாலை], செல்வி.கா.சோமசுந்தரன்கைதடி, சு.நடராசா சாவகச்சேரி, ப. தயாநிதி சாவகளீசேரி, மா. வி. தவரஞ்சிதம் மிருசுவில், மு. பூரணேஸ்வரி சாவகச்சேரி, கு. பாக்கிலக்சுமி சாவகச்சேரி, சி. வாணி சாவகச்சேரி, ப. தவநேசன் சாவகச்சேரி.

(இ - 3)

## திக்கரை - - -

(3 ஆம் பக்கத் தொடர்ச்சி)
ரவிக்கப்படவிருக்கின்றன.

சிவத்தமிழ் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி, திரு. சிவ. மகாலிங்கப் ஆகியோர் பாராட்டுரை வழங்குவார்கள். காலை ஆதினகர்த்தா ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாசாரிய சுவாமிகள் வாழ்த்துரை வழங்குவார். பல்கலைப் புலவர் க. சி. குலரத்தினம் வெளியீட்டுரை நிகழ்த்துவார்.

(க-3)

## சீனி தடுத்து வைப்பு

கொழும்பு, மார்ச் 16
அரசின் நடைமுறைகளுக்கு முரணாக இறக்குமதி செய்யப்பட்ட 4ஆயிரம் மெட்ரிக் தொன் சீனி கொழும்பு துறைமுகத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளது.

வெளிநாட்டு செலாவணித் திணைக்களத்தின் சிலவிதிகளை மீறி இச்சீனி இறக்குமதி செய்யப்பட்டதாக அரச வட்டாரங்கள் தெரிவித்தன.

(ஒ - எ)

## பதவி ஏற்ற கிராம சேவையாளர் விவரம்

யாழ்ப்பாணம் மார்ச்16
யாழ். மாவட்டத்தில் புதிய கிராமசேவையாளர் பிரிவுகளில் நேற்று கிராமசேவையாளர்கள் பதவிகளை ஏற்றனர்.

நேற்றைய உதயனில் யாழ் உதவி அரசாங்க அதிபர்பிரிவு கிராமசேவையாளர் விவரம் வெளிவந்தது.

நல்லூர் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் தெரிவானோரில் ஒரு பகுதியினர் விவரம் வருமாறு:

அரியாலை தென்தேற்கு (ஜே 89) அடைக்கல முத்து, அரியாலை தென்மேற்கு(ஜே. 90) ரி. சிறிபாலா, அரியாலை கிழக்கு மேற்கு, (ஜே.91) – கே. விவேகானந்தன், அரியாலை மேற்கு மத்தி. (ஜே. 92) – என். துரைராஜ், அரியாலைதென்மேற்கு [ஜே 93] ஆர். சண்முகநாதன், அரியாலைமத்தி வடக்கு (ஜே.94) செல்வி. என். பொன்னுத்துரை, அரியாலை மத்தி(ஜே. 95)– கே. கதிர்காமநாதன்

அரியாலை மத்தி தெற்கு (ஜே.96)-எம். மயில்வாகனம் வண்ணார்பண்ணை வடமேற்கு தெற்கு(ஜே.97)–எஸ். சச்சிதானந்தன், வண்ணை. வடமேற்கு வடக்கு (ஜே 98)– கே. கந்தசாமி, வண்ணை வடமேற்கு மேற்கு [ஜே.99]– பி. வசந்தகுமார், வண்ணை வடகிழக்குவடக்கு (ஜே.100)- கே. பஞ்சலிங்கம், வண்ணை வடகிழக்கு தெற்கு[ஜே.101]– வி. கே. தளையசிங்கம், கந்தர்மடம்வடமேற்கு[ஜே.102] – திருமதி பி. கனகசபாபதி, கந்தர்மடம் வட – கிழக்கு [ஜே . 103 ] – வி. வேலுப்பிள்ளை, கந்தர்மடம் தென்–மேற்கு [ஜே.104] என். ஜெகதீஸ்வரன், கந்தர்மடம் தென் கிழக்கு (ஜே.105)–திருமதி பி. சோமநாதன்,

நல்லூர் வடக்கு [ஜே.106]– எஸ். வசந்தகுமார், நல்லூர் மத்தி [ஜே.107] ஆர். சந்திரகுமார், நல்லூர்தெற்கு (ஜே. 108] – திருமதி நி. ரத்தினஜோதி, நல்லூர்கிழக்கு (ஜே. 109) – என். நவரெத்தினராஜ் திருநெல்வேலி மேற்கு (ஜே. 110) – கே. சிவராஜா, திருநெல்வேலிமத்தி தெற்கு[ஜே. 111] – எஸ். நித்தியானந்தராஜ், திருநெல்வேலி தென் கிழக்கு [ஜே.112]– ஆர். ராஜலிங்கம், திருநெல்வேலி வட–தெற்கு [ஜே. 113]–கே. தேவராஜ், திருநெல்வேலி மத்தி வடக்கு (கே.114)– ஜே. என். பி. பாக்கியராஜ் கோண்டாவில் வடமேற்கு (ஜே.115)– கே. முருகையா, கோண்டாவில் தென்மேற்கு (ஜே.116)– என். ஜோகராஜ், கோண்டாவில் மத்தி மேற்கு [ஜே.117]– என். சர்வகுணசீலன், கோண்டாவில் மத்தி கிழக்கு (ஜே. 118 ) – வி. சந்திரசேகரம், கோண்டாவில் வட கிழக்கு (ஜே.119) – எஸ். கனகலிங்கம்

(தொடரும்)

## வானொலி நிகழ்ச்சிகள் 16- 3- 1990

| | |
|---|---|
| 5.00 | நாதாஞ்சலி |
| 5.05 | திருமுறைப் பாடல்கள் |
| 5.30 | பாமாலை |
| 5 45 | சைவ நற்சிந்தனை |
| 5.50 | இஸ்லாமிய நற்சிந்தனை |
| 5.55 | போதி மாதவனின் போதனைகள் |
| 6.00 | வர்த்தக சேவை |
| 6.30 | செய்திகள் |
| 6.40 | செய்தித்தாள் கண்ணோட்டம் |
| 7.00 | வர்த்தக சேவை |
| 7.30 | பாடசாலைக் கூட்ட நிகழ்ச்சி |
| 7.45 | மாகாணச் செய்திகள் |
| 7.50 | வர்த்தக சேவை |
| 8·00 | வாத்திய மஞ்சரி |
| 8.15 | மெல்லிசைப்பாடல்கள் |
| 8.30 | உறுது மஞ்சரி |
| 9.00 | வர்த்தக சேவை |
| 10.00 | இசையமுதம் |
| 10:30 | பக்தி மஞ்சரி |
| 11.00 | நாதஸ்வரம் |
| 12.00 | வர்த்தக சேவை |
| 12.45 | செய்திகள் |
| 1.00 | வர்த்தக சேவை |
| 6.00 | செய்திகள் |
| 6 15 | திருவாசகம் |
| 6.45 | துதிப் பாடல் பயிற்சி |
| 7.00 | களத்து மேடு |
| 7.15 | விவசாய நாடகம் |
| 7.30 | தவக்கால கத்தோலிக்க நிகழ்ச்சி |
| 7.50 | உலகச் செய்திகள் |
| 8.00 | முஸ்லிம் நிகழ்ச்சிகள் |
| 9.00 | செய்திகள் |
| 9.20 | பக்திப் பாடல்கள் |
| 9.30 | செந்தமிழ் வளர்ந்த செம்மல்கள் |
| 9.45 | கதாப்பிரங்கம் |
| 10.30 | நினைவில் நிறைந்தவை |
| 11.00 | ஒலிபரப்பு முடிவு. |

## கும்பாபிஷேகம்

சாவகச்சேரி சங்கத்தானை சுப்பிரமணிய சுவாமி ஆலய புனராவர்த்தன பிரதிஷ்டா மகா கும்பாபிஷேகம் இன்று வெள்ளிக்கிழமை நடைபெற இருக்கிறது.

சிவாச்சாரிய செம்மனல் பிரம்மஸ்ரீ கு. ஜெகதீஸ்வரக் குருக்கள் முன்னின்று கிரியைகளை நடாத்தி வைப்பார்.

[க - 31]


# முன் மாதிரிப் பயிற்சிப் பரீட்சையும் இலவச 'கல்விக் கருத்தரங்கும்
# G.C.E. O/L March 1990

| | 16/03 வெள்ளி | 19/03 திங்கள் | 20/03 செவ்வாய் | 21/03 புதன் | 22/03 வியாழன் |
|---|---|---|---|---|---|
| 8.30 பரீட்சை | தமிழ் I | கணிதம் I | விஞ்ஞானம் I | வர்த்தகம் I | |
| 9.45 பரீட்சை | சமயம் I | சமூகக்–கல்வி I | ஆங்கிலம் I | விவசாயம் I மனையியல் I | |
| 11.00 கருத்தரங்கு | தமிழ் | தமிழ் | கணிதம் | கணிதம் — | ஆங்கிலம் |
| 12.15 கருத்தரங்கு | சமயம் | சமூகக்கல்வி | விஞ்ஞானம் | விஞ்ஞானம் | வர்த்தகம் |

பகுதி I & II ற்கான விளக்கம் கருத்தரங்கில் விபரிக்கப்படும்.

**பரீட்சை மண்டபங்கள்:**
1. பொண்ட் கல்வி நிறுவனம், ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
2. New High Studies, ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.
3. New Becon கல்வி நிறுவனம், ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

வடமராட்சியில் ''Maths Centre'' நெல்லியடி

EXAMINATION UNIT
# BOND Institutes
58A, Stanley Road, JAFFNA.

[ஸி-4032]



# VICKNA
TUITION CENTRE
52, Stanley Road, Jaffna. Regd. No. 12141

(கலை, வர்த்தக வகுப்புகளுக்கு தனித்துவம் வாய்ந்த ஒரே நிறுவனம்)

A/L கலை, வர்த்தக மீட்டல்.

DAY CLASSES (7.00 - 12.00)
ஆரம்பம்:- 19.03.1990

SATURDAY & SUNDAY (8.00 - 12.00)
ஆரம்பம்:- 18.03.1990

மு.குறிப்பு:
1. எமது தனித்துவம் வாய்ந்த ஆசிரியர் குழுவினால் ஒருங்கிணைந்து நடாத்தப்படுகின்றது.
2. வினா, விடை வகுப்புக்கள் இலவசமாக நடாத்தப்படும்.
3. [Day Classes] 4 பாடங்களும் ஒவ்வொரு நாட்களும் நடைபெறும்.

(C/4017)


## 3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அப்பன் (சிவா)



தோற்றம் :-
30-03-1965

மறைவு :-
16-03-1987

நேசித்த மண்ணின் விடுதலைக்காய் போராடி
விடியலின் முன் முடிவைத் தேடிய வீரனே!
ஆண்டுகள் தான் மூன்று ஆனாலும்
அழியாது உன்நினைவு!
வரலாறு உன்னை என்றும் மறக்காது
அது வாழுகின்ற நாளெல்லாம்
அமைப்புத்தான் ''சிவா'' என்றும்
அன்புத் தோழர்கள் ''பொடி'' என்றும்
உறவுகள் உன்னை அப்பனென்றும்
அழைத்த குரல்கள் இன்று
அழுது புலம்புகின்றன!
புரட்சி வீரனே! புதுமையின் தோழனே!!
மறவோம் மறவோம் என்றும்
உன்னை நாம் மறவோம்.!!

உன் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கும் உனது அன்பு
அப்பா, அம்மா, பெரியக்கா, பெரியத்தான், சின்னக்கா, சின்னத்தான், அண்ணா, அண்ணி, மகள் வாணி, தம்பி கண்ணன், மாமாமார், மாமிமார், மச்சாள்மார், மச்சான்மார், அன்புத் தோழர்கள்.

உரும்பிராய் கிழக்கு,
உரும்பிராய்.

[12102]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருந்துங்கள்!
'அண்ணா கோப்பி'

100 வீதம் சுத்தமான கோப்பியினால் தயாரிக்கப்பட்டு 100g, 50g, 15g பக்கட்டுக்களில் விற்பனையாகின்றது. இவற்றை பாவித்த பின் வெற்றுப்பைக்கட்டுக்களைக் கொடுத்து இனாம் பொருட்களைப் பெற்றுக் கொள்ளுங்கள்.

அண்ணா கோப்பிக் கடை,
யாழ்ப்பாணம்.

# உதயன்

16 - 03 - 1990 வெள்ளிக்கிழமை

பாடசாலைப் பிள்ளைகளின் மதிய உணவுத் திட்டத்திற்கு உகந்தது.

" ஜீவாகாரம் "

இதில் தேவையான அளவு கலோரி, புரதம், விற்றமின், தாதுப்பொருட்கள் அடங்கி உள்ளது.

அண்ணா தொழிலகம்
இணுவில்.

அமைதிப் படை விலகுவதற்கு

# மாகாண சபை அதிகாரம் பற்றி முன் நிபந்தனை விதிக்கவில்லை!

## அமைச்சர் குஜ்ரால் சொல்கிறார்

புதுடில்லி, மார்ச் 16

அமைதிப்படை முழுமையாக விலகுவதற்கு முன் வடக்கு கிழக்கு மாகாணசபைக்கு கூடுதல் அதிகாரங்கள் வழங்கப்படவேண்டும் என்பது உத்தேச இந்திய - இலங்கை நட்புறவு ஒப்பந்தத்துக்கு முன் நிபந்தனையாக விதிக்கப்படவில்லை.

இந்திய வெளியுறவு அமைச்சர் ஐ. கே. குஜ்ரால் முன் கண்டவாறு தெரிவித்தார்.

லோகசபையில் எழுப்பப்பட்ட கேள்வி ஒன்றுக்கு அமைச்சர் எழுத்து மூலமான பதில் ஒன்றை அளித்தார்.

அப்பதிலில் அமைச்சர் குஜ்ரால் மேலும் கூறியிருந்ததாவது:-

உத்தேச இந்திய இலங்கை நட்புறவு ஒப்பந்தம் பற்றிய இலங்கை அரசின் பதில் இன்னும் புதுடில்லிக்குக் கிடைக்கவில்லை.

நட்புறவு ஒப்பந்தம் ஒன்றைச் செய்துகொள்ள வேண்டும் என்று இலங்கை தான் அடிக்கடி வற்புறுத்தி வந்தது. அத்துடன் நகல் இந்திய - இலங்கை நட்புறவு ஒப்பந்தத்தையும் இலங்கை எமக்கு அனுப்பி வைத்தது.

### இந்தியாவின் பதில்

இந்தியா தனது பதில்யோசனைகளை கடந்த ஜனவரி மாதம் 12ஆம் திகதி இலங்கைக்கு அனுப்பி வைத்தது. அதற்குப் பின்னர் இலங்கையிடம் இருந்து தகவல் எதுவும் எமக்குக் கிடைக்கவில்லை.

அமைதிப்படை விலக்கப்பட்ட பின்னர் வடக்கு-கிழக்கில் உள்ள தமிழர்களின் பாதுகாப்பை உறுதி செய்யும் பொறுப்பு இலங்கைக்கும், தமிழ்ப் போராளிக்குழுக்களுக்கும் தான் உள்ளது.

இது தொடர்பாகவும் இந்திய - இலங்கை உடன்படிக்கையை அமுல் செய்வது குறித்தும் சம்பந்தப்பட்ட தரப்பினருடன் இந்திய அரசு தொடர்ந்து தொடர்கொண்டிருக்கும்.

### மீண்டும் உறுதி

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் உள்ள எல்லா சமூகத்தினரின் பாதுகாப்பை உறுதிசெய்வதும், அதிகாரப் பரவலாக்கலைத் துரிதமாக அமுல் செய்வதும் தங்கள் பொறுப்புஎன்றும் இலங்கை அரசு மீண்டும் உறுதியளித்திருக்கிறது.

உத்தேச நட்புறவு ஒப்பந்தம், 87 ஜூலையில், இந்திய-இலங்கை ஒப்பந்தம் கைச்சாத்தானபோது பரிமாறிக்கொள்ளப்பட்ட கடிதங்களை மாற்றீடு செய்வதாக அமையும் — என்றார். (அ-எ-ச)

# பிரிட்டிஷ் பத்திரிகையாளருக்கு ஈராக்கில் மரண தண்டனை!

## சடலம் தூதரகத்திடம் ஒப்படைப்பு

பக்தாத், மார்ச். 16

பிரிட்டிஷ் பத்திரிகையாளர் பர்ஸாத் பஸோத் பஸோப்ற் மீது விதிக்கப்பட்ட மரண தண்டனையை ஈராக் நேற்று நிறைவேற்றியது.

ஈராக் தலைநகர் பக்தாத்தில் உள்ள பிரிட்டிஷ் தூதரகத்திடம் மரணதண்டனை நிறைவேற்றப்பட்ட பத்திரிகையாளரின் சடலம் ஈராக் அதிகாரிகளால் கையளிக்கப்பட்டது.

உளவு வேலையில் ஈடுபட்டதாக இப்பத்திரிகையாளர் கடந்த நவம்பரில் பக்தாத்தில் கைதுசெய்யப்பட்டார்.

பக்தாத்திற்கு அருகில்உள்ள ஏவுகணைத்தளம் ஒன்றில் ஏற்பட்ட விபத்தில் நூற்றுக்கு அதிகமானோர் மரணமான சம்பவம் பற்றிய மேலதிக விவரங்களைச் சேகரிக்கப் போன இடத்திலேயே இப்பத்திரிகையாளர் கைதுசெய்யப்பட்டு குற்றஞ் சாட்டப்பட்டார்.

அவருக்கு உதவியதாக குற்றஞ் சாட்டப்பட்ட தாதி டாபேனே பரிஷ் என்பவருக்கு 15 வருட சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது

மரணதண்டனை நிறைவேற்றப்பட்டது குறித்து பிரிட்டிஷ் அதிர்ச்சி தெரிவித்துள்ளது.

ஈராக்மீது பொருளாதாரத் தடைகளை விதிக்கும்படி ஐரோப்பிய பொருளாதார சமூகத்தை பிரிட்டன் கேட்டுள்ளது. (ஒ-எ)

# பிக்குகள் கைது

கொழும்பு, மார்ச். 16

வெலிஓயாப் பிரதேசத்தில் உள்ள பராக்கிரமபுரத்தில் இரண்டு பௌத்த பிக்குகளைப் பாதுகாப்புப் படையினர் கைதுசெய்தனர்.

ஜே வி.பி. யுடன் தொடர்பு கொண்டவர்கள் என்ற சந்தேகத்தில் இவர்கள் கைது செய்யப்பட்டனர் என்று கொழும்பில் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

# பயிலுநர் ஆசிரியர்களுக்கு தொழிற்றூண்டல் நிகழ்ச்சி

## 19 ஆம் திகதிமுதல் 10 நாட்களுக்கு

யாழ்ப்பாணம், மார்ச் 16

யாழ். மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட பயிலுனர் ஆசிரியர்களுக்கு தொழிற்றூண்டல் நிகழ்ச்சி ஒன்று நடாத்தப்பட இருக்கிறது.

அவர்களுக்குரிய நியமனக் கடிதங்கள் அன்று வழங்கப்படும்.

19 ஆம் திகதி: வேலணை நெடுந்தீவு, ஊர்காவற்றுறை பிரிவினருக்கு வேலணை சேர். வைத்திலிங்கம் துரைச்சாமி வித்தியாசாலையிலும்-

20 ஆம் திகதி: சாவகச்சேரி பிரிவினருக்கு டிறிபேர்க் கல்லூரியிலும்-

22 ஆம்: திகதி தெல்லிப்பழை பிரிவினருக்கு தெல்லிப்பழை யூனியன் கல்லூரியிலும்-

23 ஆம் திகதி: சங்கானை, சண்டிலிப்பாய் பிரிவினருக்கு பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரியிலும்-

24 ஆம் திகதி: நல்லூர் பிரிவினருக்கு யாழ். இந்து மகளிர் கல்லூரியிலும்-

25 ஆம் திகதி: யாழ்ப்பாணப் பிரிவினருக்கு வேம்படி மகளிர் கல்லூரியிலும்-

26 ஆம் திகதி: கோப்பாய், உடுவில் பிரிவினருக்கு மருதனாமடம் இராமநாதன் கல்லூரியிலும்-

27 ஆம் திகதி: பருத்தித்துறை, பருத்தித்துறை கிழக்கு பிரிவினருக்கு வட- இந்து மகளிர் கல்லூரியிலும்-

28 ஆம் திகதி: கரவெட்டி பிரிவினருக்கு நெல்லியடி ம. ம. வித்தியாலயத்திலும்- இந்த நிகழ்ச்சிகள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன. (ஒ-3)

கி. ஐரோப்பிய நாடுகளுக்கும் ஜப்பானுக்குமான

# பல்கலைக் கழக புலமைப் பரிசில் விண்ணப்ப திகதி 20வரை நீடிப்பு

சோவியத் யூனியன், பல்கேரியா, செக்கோஸ்லேவேகியா, யூகோஸ்லேவியா ஹங்கேரி, ஜப்பான் ஆகிய நாடுகளால் வழங்கப்பட்ட பல்கலைக்கழகப் புலமைப் பரிசில் திட்டத்தின் கீழ் விண்ணப்பம் செய்யும் கடைசித் திகதி மார்ச் 20 வரை நீடிக்கப்பட்டிருப்பதாக உயர்கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

அண்மையில் வெளியான ஜீ. சீ. ஈ. உயர்தரப் பரீட்சை முடிவுகளின்படி, இப் பரீட்சைக்கு விண்ணப்பிப்பதற்குத் தகுதி பெற்ற மாணவர்களுக்கு ஒரு சந்தர்ப்பம் அளிக்குமுகமாகவே விண்ணப்ப முடிவு திகதி நீடிக்கப்பட்டிருக்கிறது.

ஜீ. சீ. ஈ. உயர்தரப் பரீட்சை முடிவு தெரிவதற்கு முன்னர் விண்ணப்பித்த மாணவர்களும், பரீட்சை முடிவுகளை மார்ச் 20 க்கு முன்னர் அமைச்சுக்குத் தெரியப்படுத்தும்படி கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர். (இ-எ)

# தொண்டர் ஆசிரியர்கள் 26 வரை விண்ணப்பிக்கலாம்

கொழும்பு, மார்ச். 16

தொண்டர் ஆசிரியர்களை நிரந்தர சேவையில் சேர்த்துக் கொள்வது சம்பந்தமான விண்ணப்ப முடிவு திகதி இம் மாதம் 26 ஆம் திகதிவரை நீடிக்கப்பட்டுள்ளது.

இத்தகவலை கல்விச் சேவை ஆணைக்குழு வெளியிட்டது.

தாமதமாக அரச வர்த்தமானி கிடைத்ததன் காரணமாக பலர் விண்ணப்பிக்கத் தவறிவிட்டனர். அதனை அடுத்தே இந்த நீடிப்பு வழங்கப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டது. (ஒ-எ)

யாழ். மக்களுக்கோர் அரிய செய்தி!

மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது

இரவு - பகல்

சர்வதேச நேரடித் தொலைபேசிச் சேவை

யாழ். நகரிலிருந்தே உலகின் எந்த நாட்டிலாவது வதியும் தங்கள் உறவினர்களுடனோ, நண்பர்களுடனோ உடனடியாக நேரடித் தொலைபேசி மூலம் தொடர்பு கொள்ளலாம்.

★ நேரடியான துரித சேவை
★ தெளிவான சம்பாஷணை
★ நியாயமான கட்டணம்
★ இரவு - பகல் சேவை

தங்கள் சகல தொலைபேசி அழைப்புகளுக்கும் நாடுங்கள்:

சர்வதேச நேரடித் தொலைபேசி நிலையம்

எஸ். பீ எஸ் போக்குவரத்துச் சேவைக் கட்டிடம்
இல. 27, விக்ரோறியா றோட்,
(யாழ். ஆஸ்பத்திரிப் பின் வீதி)
யாழ்ப்பாணம்.
தொலைபேசி இலக்கம் — 025-2850

குறிப்பு :-

இரவு நேரங்களில் நமது வாடிக்கையாளர்களுக்கு வெளிநாடுகளில் உள்ளவர்களால் பெறப்படும் அழைப்புக்களில் சம்பாஷணை செய்வதற்கும் இடமளிக்கப்படும். [சி/4011]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 16- 03 - 1990 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# அளவையியல்: இங்கேயே பட்டம் பெறலாம்

யாழ்ப்பாணம், மார்ச் 16

இலங்கையில் முதற்தடவையாக நில அளவையியல் வரைபடத் தயாரிப்புத் துறைக்கு எம். எஸ். சி. பட்டம் வழங்க அரசு அனுமதி வழங்கியுள்ளது.

இத்துறையைச் சேர்ந்தோருக்கு தியத்தலாவையில்உள்ள நிலையத்தில் கல்வி வழங்கப்பட்டு வருகிறது.

இதுகாலவரை இத் துறையில் பட்டம் பெறவேண்டுமானால் வெளி நாடுகளுக்குச் செல்லவேண்டிய நிலை இருந்து வந்தது. (ஒ-3)

# வவுனியாவில் தெரிவானோர் இன்று பதவியேற்காவிடில் நியமனங்கள் ரத்தாகும்!

வவுனியா, மார்ச் 16

வவுனியாவில், பயிலுனர் ஆசிரியர்களாக 454 பேர் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். நேற்று வியாழக்கிழமை அவர்களுக்கு நியமனங்கள் வழங்கப்பட்டன.

நியமனம்பெற்றவர்கள் தங்களுக்கு ஒதுக்கப்பட்ட பாடசாலைகளில் இன்று வெள்ளிக்கிழமை கடமையைப்பொறுப்பேற்காவிடில், நியமனங்கள் ரத்துச்செய்யப்படும் — என்று பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. எஸ். நவரட்ணராஜா தெரிவித்தார்.

தமிழ்மொழி பாடசாலைகளுக்கு 308 பேரும், முஸ்லிம் பாடசாலைகளுக்கு 49பேரும், சிங்களமொழிப் பாடசாலைகளுக்கு 97 பேருமாக மொத்தம் 454 பயிலுனர் ஆசிரியர்களில் 430 பேருக்கு வியாழனன்று நியமனம் வழங்கப்பட்டது. மிஞ்சிய 24 பேருக்கு பின்னர் வழங்கப்படும் என்று பிரதிக் கல்விப் பணிப்பாளர் நேற்று வவுனியா தமிழ் மகா வித்தியாலயத்தில் நடைபெற்ற நியமனம் வழங்கும் வைபவத்தில் பேசுகையில் தெரிவித்தார்.

நிரந்தர ஆசிரியர்களுக்குரிய சலுகைகள் எதுவும் இவர்களுக்கு இல்லாதபோதும் 14 நாள் சுகயீன லீவும், 7 நாள் அமைய லீவுமாக 21 நாள் லீவுமட்டுமே அனுமதிக்கப்பட்டுள்ளது எனவும் அவர் தெரிவித்தார். (அ-164)

# நிறைவேற்று ஜனாதிபதியாக கோர்பச்சேவ் தெரிவு!

## 500 பேர் எதிர்த்து வாக்களிப்பு

மாஸ்கோ, மார்ச் 16

சோவியத் யூனியனின் முதலாவது நிறைவேற்று ஜனாதிபதியாக திரு, மிக்செய்ல் கோர்பச்சேவ் தெரிவுசெய்யப்பட்டார்.

நாடாளுமன்றத்தில் 60 சதவீதமான உறுப்பினர்கள் திரு. கோர்பச்சேவுக்கு வாக்களித்தனர். 500 பேர் எதிர்த்து வாக்களித்தனர்.

கூடுதல் அதிகாரங்களுடன் கூடிய ஜனாதிபதியை ஏற்று திரு. கோர்பச்சேவ் பேசினார்.

'நான் ஜனநாயக வழியில் நடந்துகொள்வேன்' - இப்படி திரு. கோர்பச்சேவ் தனது பேச்சில் சொன்னார்.

'பொருளாதார முன்னேற்றம், மறுசீரமைப்பு ஆகிய கொள்கைகளை விரைந்து செயற்படுத்த எனது புதிய பதவியைப் பயன்படுத்துவேன்'.

'இன உணர்களால் எனது நாடு நெருக்கடிக்குள்ளாகியுள்ளது.'

'அனைவருக்கும் சோவியத் யூனியன் பொதுவான தாயகம் என்ற உணர்வை ஏற்படுத்துவேன்' என்றும் திரு. கோர்பச்சேவ் தெரிவித்தார். (ஒ-எ)

# 'ராகிங்' குறித்து கண்டனம்

யாழ்ப்பாணம், மார்ச் 16

'ராகிங்' குறித்து யாழ். பல்கலைக் கழக மாணவர் ஒன்றியம் கண்டன அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

அதில் கூறப்பட்டுள்ளதாவது—

'ராகிங்' என்ற போர்வையில் பல்கலைக்கழக புதிய மாணவர்கள் மீது குறிப்பிட்ட சில சிரேஷ்ட மாணவர்களினால் திணிக்கப்படுகின்ற அநாகரிகமான செயலை வன்மையாகக் கண்டிக்கிறோம்.

தற்போது பல்கலைக்கழகத்திற்கு வெளியே நடைபெறுகின்ற மேற்படி சம்பவங்கள் சம்பந்தமாக பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்திற்குத் தெரியப்படுத்தினால் அவற்றைக் கட்டுப்படுத்தக் கூடியதாக இருக்கும். புதிய மாணவர்கள் அச்சம் கொள்ளாது மாணவர் ஒன்றியத்துடன் தொடர்புகொள்வதன் மூலம் இவ்வநாகரிகச் செயல்களைத் தடுப்பதற்கு ஒத்துழைப்பு வழங்குமாறு கேட்டுக்கொள்கின்றோம் - என்று உள்ளது. (ஒ)

# மாணவரைக் காணவில்லை

யாழ்ப்பாணம், மார்ச் 16

நேற்றுமாலை அரியாலை பூம்புகாரில் கடலுக்குக் குளிக்கச்சென்ற மாணவரைக்காணவில்லை.

ரஞ்சித் வில்வரட்ணம் என்பவரே கடலில் குளிக்கச் சென்று காணாமற்போனவர் ஆவார். நேற்று இரவுவரை அவரைத் தேடும்பணி தொடர்ந்து நடைபெற்றது.

திரு. ரஞ்சித் யாழ். பல்கலைக் கழகத்தின் கலைப்பீட முதலாம் ஆண்டு மாணவர். (அ 9)

# நெல்லியடி வங்கியில் 1,000 ரூபா கொடுப்பனவு

யாழ்ப்பாணம், மார்ச் 16

இலங்கை வங்கி நெல்லியடிக் கிளையில் நாளை சனிக்கிழமையும் மறுதினம் ஞாயிற்றுக்கிழமையும் ஆயிரம் ரூபா நிவாரணம் கொடுப்பனவு வழங்கப்படும்.

நாளை சனிக்கிழமை நிவாரணம் வழங்கப்படவுள்ள கிராமசேவையாளர் பிரிவுகளும் குடும்ப எண்ணிக்கையும் வருமாறு:-

★ அல்வாய் கிழக்கு - 418
★ கப்புது - 28
★ துன்னாலை தெற்கு-149

ஞாயிற்றுக்கிழமை நிவாரணம் வழங்கப்படவுள்ள பிரிவும் குடும்ப எண்ணிக்கையும் வருமாறு:-

★ கரவெட்டி மேற்கு - 633 (ஒ)

# அதிசயக் குழந்தை

புத்தள ஆஸ்பத்திரியில் ஒட்டிப் பிறந்த இரட்டைக் குழந்தைகளை ஒரு தாய் பிரசவித்தார்.

இக்குழந்தைக்கு இரண்டு தலைகள், நான்கு கைகள், நான்கு கால்கள்இருந்தன.

சிறிது நேரத்தில் குழந்தைகள் இறந்து விட்டன.

# மரண அறிவித்தல்கள்

## திருமதி காந்திமதி செல்லத்துரை

கோப்பாய் வடக்கைபிறப்பிடமாகக் கொண்ட திருமதி காந்திமதி செல்லத்துரை 11-3-90 இல் காலமாகிவிட்டார். இவர்செல்லத்துரையின் அன்புமனைவியும் அனுஜாவின் அன்புத்தாயாரும், செல்லத்துரைமங்களத்தின் அன்பு மகளும், இளையதம்பி முத்துப்பிள்ளையின் அன்பு மருமகளும், காலஞ் சென்ற இராசலிங்கம் பூரணம் (ஆசிரியை திருநெல்வேலி இ.த.க. பாடசாலை) ஆகியோரின் மைத்துனியும், பத்மாவதி (ஜேர்மனி), சறோஜினிதேவி, மோகன், மதிமுகன் (நிற்வெயர் கோப்பாய்), மனோதீபன் (ஜேர்மனி), சியாமளா (நிற்வெயர் கோப்பாய்), வளர்மதி ஜேர்மனி), மால்மருகன் (சுவிஸ்) மஞ்சுளாதேவி மயூறேயன் (பாபு), ஆகியோரின் அன்பு சகோதரியும் பெருந்தவராசா (ஜேர்மனி), லோகேஸ்வரன், லிங்கேஸ்வரி, யோகநாதன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மைத்துனியும், மலரவனின்சித்தியும், (தனுஜா) நிறோசன் ஆகியோரின் அத்தையும் ஜெனனின் (ஜேர்மனி) பெரியதாயாரும் ஆவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் 17-3-90 சனிக்கிழமை காலை 9.00 மணி அளவில் திருமால் இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரிகைக்காக கோப்பாய் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
மு. செல்லத்துரை

'திருமால் இல்லம்'
கோப்பாய்.

(12056)

## திருமதி நேசம்மா பொன்னையா

ஏழாலை வடக்கைச் சேர்ந்த திருமதி நேசம்மா பொன்னையா 15-03-1990 வியாழக்கிழமை அன்று காலமானார்.

இவர் காலஞ்சென்ற திரு. பொன்னையா (இளைப்பாறிய ஆசிரியர்) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற திரு. இராசையா, திரு. துரையையா ஆகியோரின் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை 16-03-1990 வெள்ளிக்கிழமை மாலை 2-00 மணிக்கு ஏழாலையில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெறும்.

தகவல்:
திருமதி துரையையா

(12104)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org